ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாத$_2$ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத$_3$ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸத$_3$ா ஹ்ரு'தி$_3$ ॥

# ॥ திவ்ய பிரபந்தம் போற்றும் திருவேங்கடம் ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஶ்ரீ:
ஶ்ரீமதே ராமாநுஜாய நம:
ஶ்ரீமதே நிக3மாந்தமஹாதே3ஶிகாய நம:

# ॥ திவ்ய பிரபந்தம் போற்றும் திருவேங்கடம் ॥

## பொது தனியன்கள்

ராமாநுஜ த3யாபாத்ரம் ஜ்ஞாநவைராக்3ய பூ4ஷணம் ।
ஶ்ரீமத்3வேங்கடநாத2ார்யம் வந்தே3 வேத3ாந்ததே3ஶிகம் ॥ 1 ॥

லக்ஷ்மீநாத2ஸமாரம்ப4ாம் நாத2யாமுநமத்4யமாம் ।
அஸ்மதா3சார்யபர்யந்தாம் வந்தே3 கு3ருபரம்பராம் ॥ 2 ॥

யோ நித்யமச்யுதபத3ாம்பு3ஜயுக்3மருக்ம-
வ்யாமோஹதஸ்ததி3தராணி த்ருணாயமேநே ।
அஸ்மத்3கு3ரோர்ப4க3வதோஸ்ய த3யைகஸிந்தே4ா:
ராமாநுஜஸ்ய சரணௌ ஶரணம் ப்ரபத்3யே ॥ 3 ॥

மாதா பிதா யுவதயஸ்தநயா விபூ4தி:
ஸர்வம் யதே3வ நியமேந மத3ந்வயாநாம் ।
ஆத்3யஸ்ய ந: குலபதேர்வகுளாபி4ராமம்
ஶ்ரீமத் தத3ங்க்4ரியுக3ளம் ப்ரணமாமி மூர்த்4நா ॥ 4 ॥

பூ4தம் ஸரஶ்ச மஹத3ாஹ்வய ப4ட்டநாத2
ஶ்ரீப4க்திஸார குலஶேக2ர யோகி3வாஹாந் ।
ப4க்தாங்க்4ரிரேணு பரகால யதீந்த்3ர மிஶ்ராந்
ஶ்ரீமத் பராங்குஶமுநிம் ப்ரணதோஸ்மிநித்யம் ॥ 5 ॥

## பெரியாழ்வார் தனியன்கள்

கு3ருமுக2மநதீ4த்ய ப்ராஹ வேத3ாநஶேஷாந்
நரபதிபரிக்லுப்தம் ஶுல்கமாதா3துகாம: ।

www.prapatti.com

ஶ்வஶுரமமரவந்த்$_3$யம் ரங்க$_3$நாத$_2$ஸ்ய ஸாக்ஷாத்
    த்$_3$விஜகுலதிலகம் தம் விஷ்ணுசித்தம் நமாமி॥

மின்னார் தடமதிள்சூழ் வில்லிபுத்தூரென்றொரு கால்⋆
    சொன்னார் கழற்கமலம் சூடினோம்⋆- முன்னாள்
கிழியறுத்தான் என்றுரைத்தோம்⋆ கீழ்மையினிற் சேரும்
    வழியறுத்தோம்⋆ நெஞ்சமே! வந்து

பாண்டியன் கொண்டாடப் பட்டர்பிரான் வந்தானென்று⋆
    ஈண்டிய சங்கம் எடுத்தூத⋆ வேண்டிய
வேதங்களோதி⋆ விரைந்து கிழியறுத்தான்⋆
    பாதங்கள் யாமுடைய பற்று

## பெரியாழ்வார் திருமொழி - திருப்பல்லாண்டு

‡பல்லாண்டு பல்லாண்டு⋆ பல்லாயிரத்தாண்டு⋆
    பல கோடி நூறாயிரம்⋆
மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா!⋆ உன்-
    சேவடி செவ்வி திருக்காப்பு (1)

‡அடியோமோடும் நின்னோடும்⋆ பிரிவின்றி
    ஆயிரம் பல்லாண்டு⋆
வடிவாய் நின் வல மார்பினில்⋆ வாழ்கின்ற
    மங்கையும் பல்லாண்டு⋆
வடிவார் சோதி வலத்துறையும்⋆ சுட-
    ராழியும் பல்லாண்டு⋆
படை போர் புக்கு முழங்கும்⋆ அப்பாஞ்ச-
    சன்னியமும் பல்லாண்டே (2)

வாழாட் பட்டு நின்றீருள்ளீரேல்⋆ வந்து
    மண்ணும் மணமும் கொண்மின்⋆
கூழாட் பட்டு நின்றீர்களை⋆ எங்கள்
    குழுவினில் புகுதலொட்டோம்⋆
ஏழாட் காலும் பழிப்பிலோம் நாங்கள்⋆

இராக்கதர்வாழ்⋆ இலங்கை-
பாழாளாகப் படை பொருதானுக்குப்⋆
பல்லாண்டு கூறுதுமே (3)

ஏடுநிலத்தில் இடுவதன் முன்னம் வந்து⋆
எங்கள் குழாம் புகுந்து⋆
கூடு மனமுடையீர்கள் வரம்பொழி⋆
வந்தொல்லைக் கூடுமினோ⋆
நாடு நகரமும் நன்கறிய⋆ நமோ
நாராயணாயவென்று⋆
பாடு மனமுடைப் பத்தருள்ளீர்!⋆ வந்து
பல்லாண்டு கூறுமினே (4)

அண்டக்குலத்துக்கதிபதி ஆகி⋆
அசுரர் இராக்கதரை⋆
இண்டைக் குலத்தை எடுத்துக் களைந்த⋆
இருடீகேசன் தனக்கு⋆
தொண்டக் குலத்திலுள்ளீர்! வந்தடி தொழுது⋆
ஆயிர நாமம்சொல்லி⋆
பண்டைக் குலத்தைத் தவிர்ந்து⋆ பல்லாண்டு பல்-
லாயிரத்தாண்டென்மினே (5)

எந்தை தந்தை தந்தை தந்தை தம் மூத்தப்பன்⋆
ஏழ் படி கால் தொடங்கி⋆
வந்து வழிவழி ஆட்செய்கின்றோம்⋆ திரு-
வோணத் திருவிழவில்
அந்தியம் போதில் அரியுருவாகி⋆
அரியை அழித்தவனை⋆
பந்தனை தீரப் பல்லாண்டு⋆ பல்லாயிரத்-
தாண்டென்று பாடுதுமே (6)

தீயிற் பொலிகின்ற செஞ்சுடராழி⋆
திகழ் திருச்சக்கரத்தின்⋆
கோயிற்பொறியாலே ஒற்றுண்டு நின்று⋆

குடிகுடி ஆட்செய்கின்றோம்⋆
மாயப் பொருபடை வாணனை⋆ ஆயிரந்
தோளும் பொழி குருதி-
பாய⋆ சுழற்றிய ஆழி வல்லானுக்குப்⋆
பல்லாண்டு கூறுதுமே (7)

நெய்யிடை நல்லதோர் சோறும்⋆ நியதமும்
அத்தாணிச் சேவகமும்⋆
கையடைக் காயும் கழுத்துக்குப் பூணொடு⋆
காதுக்குக் குண்டலமும்⋆
மெய்யிட நல்லதோர் சாந்தமும் தந்து⋆ என்னை
வெள்ளுயிராக்க வல்ல⋆
பையுடை நாகப் பகைக்கொடியானுக்குப்⋆
பல்லாண்டு கூறுவனே (8)

உடுத்துக் களைந்த நின் பீதகவாடை
உடுத்துக்⋆ கலத்ததுண்டு⋆
தொடுத்த துழாய்மலர் சூடிக் களைந்தன⋆
சூடுமித்தொண்டர்களோம்⋆
விடுத்த திசைக்கருமம் திருத்தித்⋆ திரு-
வோணத் திருவிழவில்⋆
படுத்த பைந்நாகணைப் பள்ளிகொண்டானுக்குப்⋆
பல்லாண்டு கூறுதுமே (9)

எந்நாள் எம்பெருமான்⋆ உன்தனக்கடி-
யோம் என்றெழுத்துப்பட்ட-
அந்நாளே⋆ அடியோங்கள் அடிக்குடில்⋆
வீடுபெற்றுய்ந்ததுகாண்⋆
செந்நாள் தோற்றித்⋆ திருமதுரையுள் சிலை-
குனித்து⋆ ஐந்தலைய-
பைந்நாகத் தலை பாய்ந்தவனே!⋆ உன்னைப்
பல்லாண்டு கூறுதுமே (10)

www.prapatti.com

அல்வழக் கொன்றுமில்லா⋆ அணிகோட்டியர் கோன்⋆
    அபிமான துங்கன்-
செல்வனைப்போலத்⋆ திருமாலே! நானும்
    உனக்குப் பழவடியேன்⋆
நல்வகையால் நமோ நாராயணாவென்று⋆
    நாமம் பல பரவி⋆
பல்வகையாலும் பவித்திரனே!⋆ உன்னைப்
    பல்லாண்டு கூறுவனே (11)

‡பல்லாண்டென்று பவித்திரனைப்⋆ பர-
    மேட்டியை⋆ சார்ங்கம் என்னும்
வில்லாண்டான் தன்னை⋆ வில்லிபுத்தூர் விட்டு-
    சித்தன் விரும்பியசொல்⋆
நல்லாண்டென்று நவின்றுரைப்பார்⋆ நமோ
    நாராயணாயவென்று⋆
பல்லாண்டும் பரமாத்மனைச்⋆ சூழ்ந்திருந்-
    தேத்துவர் பல்லாண்டே (12)

## திருவேங்கடமுடையான் பாசுரங்கள்

### பெரியாழ்வார் திருமொழி (1-5) - தன்முகத்து

சுற்றும் ஒளிவட்டம் சூழ்ந்து⋆ சோதி பரந்தெங்கும்⋆
    எத்தனை செய்யினும்⋆ என்மகன் முகம் நேரொவ்வாய்⋆
வித்தகன் வேங்கட வாணன்⋆ உன்னை விளிக்கின்ற⋆
1 கைத்தலம் நோவாமே⋆ அம்புலீ! கடிதோடிவா (3)

### பெரியாழ்வார் திருமொழி (1-9) - பொன்னியற்கிண்கிணி

என் இது மாயம்⋆ என் அப்பன் அறிந்திலன்⋆
    முன்னைய வண்ணமே கொண்டு⋆ அளவாய் என்ன⋆
மன்னு நமுசியை⋆ வானில் சுழற்றிய⋆
    மின்னு முடியனே! அச்சோ அச்சோ⋆
2 வேங்கட வாணனே! அச்சோ அச்சோ (8)

www.prapatti.com

## பெரியாழ்வார் திருமொழி (2-6) - வேலிக்கோல்

தென் இலங்கை மன்னன்⋆ சிரம் தோள் துணிசெய்து⋆
மின் இலங்கு பூண்⋆ விபீடண நம்பிக்கு⋆
என் இலங்கு நாமத்தளவும்⋆ அரசென்ற⋆
மின் அலங்காரற்கோர் கோல் கொண்டு வா!⋆
3 வேங்கட வாணர்க்கோர் கோல் கொண்டு வா (9)

## பெரியாழ்வார் திருமொழி (2-7) - ஆனிரை

மச்சொடு மாளிகை ஏறி⋆ மாதர்கள் தம் இடம் புக்கு⋆
கச்சொடு பட்டைக் கிழித்துக்⋆ காம்பு துகில் அவை கீறி⋆
நிச்சலும் தீமைகள் செய்வாய்!⋆ நீள் திருவேங்கடத்தெந்தாய்!⋆
4 பச்சைத் தமனகத்தோடு⋆ பாதிரிப் பூச் சூட்ட வாராய் (3)

## பெரியாழ்வார் திருமொழி (2-9) - வெண்ணெய்விழுங்கி

போதர் கண்டாய் இங்கே போதர் கண்டாய்⋆
போதரேன் என்னாதே போதர் கண்டாய்⋆
ஏதேனும் சொல்லி அசலகத்தார்⋆
ஏதேனும் பேச நான் கேட்க மாட்டேன்⋆
கோதுகலம் உடைக் குட்டனேயோ!⋆
குன்றெடுத்தாய்! குடம் ஆடு கூத்தா!⋆
வேதப் பொருளே! என் வேங்கடவா!⋆
5 வித்தகனே! இங்கே போதராயே (6)

## பெரியாழ்வார் திருமொழி (3-3) - சீலைக்குதம்பை

கடி ஆர் பொழில் அணி வேங்கடவா!⋆ கரும்
போரேறே!⋆ நீ உகக்கும்
குடையும் செருப்பும் குழலும் தருவிக்கக்⋆
கொள்ளாதே போனாய் மாலே!⋆
கடிய வெங்கானிடைக் கன்றின் பின் போன⋆

www.prapatti.com

சிறுக்குட்டச் செங்கமல
அடியும் வெதும்பி⋆ உன் கண்கள் சிவந்தாய்⋆
6 அசைந்திட்டாய் நீ எம்பிரான்! (4)

## பெரியாழ்வார் திருமொழி (5-4) - சென்னியோங்கு

‡சென்னி ஓங்கு⋆ தண் திருவேங்-
கடம் உடையாய்!⋆ உலகு
தன்னை வாழ நின்ற நம்பீ!⋆
தாமோதரா! சதிரா!⋆
என்னையும் என் உடைமையையும்⋆ உன்
சக்கரப்பொறி ஒற்றிக்கொண்டு⋆
நின் அருளே புரிந்திருந்தேன்⋆
7 இனி என் திருக் குறிப்பே (1)

## நாச்சியார் திருமொழி (1-1) - தையொரு திங்கள்

‡தையொரு திங்களும் தரை விளக்கித்⋆
தண் மண்டலம் இட்டு மாசி முன்னாள்⋆
ஐய நுண் மணல் கொண்டு தெரு அணிந்து⋆
அழகினுக்கலங்கரித்தனங்கதேவா!⋆
உய்யவும் ஆங்கொலோ என்று சொல்லி⋆
உன்னையும் உம்பியையும் தொழுதேன்⋆
வெய்யதோர் தழல் உமிழ் சக்கரக் கை⋆
8 வேங்கடவற்கென்னை விதிக்கிற்றியே (1)

மத்த நன் நறு மலர் முருக்க மலர்
கொண்டு⋆ முப்போதும் உன்னடி வணங்கி⋆
தத்துவம் இலி என்று நெஞ்செரிந்து⋆
வாசகத்தழித்துன்னை வைதிடாமே⋆
கொத்தலர் பூங்கணை தொடுத்துக்கொண்டு⋆
கோவிந்தன் என்பதோர் பேர் எழுதி⋆
வித்தகன் வேங்கட வாணன் என்னும்⋆
9 விளக்கினில் புக என்னை விதிக்கிற்றியே (3)


www.prapatti.com

## நாச்சியார் திருமொழி (1-4) - தெள்ளியார் பலர்

‡காட்டில் வேங்கடம்⋆ கண்ண புர நகர்⋆
வாட்டம் இன்றி⋆ மகிழ்ந்துறை வாமனன்⋆
ஓட்டரா வந்து⋆ என் கைப் பற்றி⋆ தன்னொடும்
10 கூட்டு மாகில்⋆ நீ கூடிடு கூடலே! (2)

## நாச்சியார் திருமொழி (1-5) - மன்னு பெரும்புகழ்

வெள்ளை விளிசங்கிடம் கையில் கொண்ட⋆
விமலன் எனக்குருக் காட்டான்⋆
உள்ளம் புகுந்தென்னை நைவித்து⋆ நாளும்
உயிர் பெய்து கூத்தாட்டுக் காணும்⋆
கள் அவிழ் செண்பகப் பூ மலர் கோதிக்⋆
களித்திசை பாடும் குயிலே⋆
மெள்ள இருந்து மிழற்றி மிழற்றாது⋆ என்
11 வேங்கடவன் வரக் கூவாய் (2)

## நாச்சியார் திருமொழி (1-8) - விண்ணீல மேலாப்பு

‡விண்ணீல மேலாப்பு⋆ விரித்தாற் போல் மேகங்காள்⋆
தெண்ணீர் பாய் வேங்கடத்து⋆ என் திருமாலும் போந்தானே⋆
கண்ணீர்கள் முலைக் குவட்டில்⋆ துளி சோரச் சோர்வேனை⋆
12 பெண்ணீர்மை ஈடழிக்கும்⋆ இது தமக்கோர் பெருமையே (1)

மா முத்த நிதி சொரியும்⋆ மா முகில்காள்⋆ வேங்கடத்துச்
சாமத்தின் நிறங்கொண்ட⋆ தாளாளன் வார்த்தை என்னே⋆
காமத் தீ உள் புகுந்து⋆ கதுவப் பட்டிடைக் கங்குல்⋆
13 ஏமத்தோர் தென்றலுக்கு⋆ இங்கிலக்காய் நான் இருப்பேனே (2)

ஒளி வண்ணம் வளை சிந்தை⋆ உறக்கத்தோடிவை எல்லாம்⋆
எளிமையால் இட்டென்னை⋆ ஈடழியப் போயினவால்⋆
குளிர் அருவி வேங்கடத்து⋆ என் கோவிந்தன் குணம் பாடி⋆
14 அளி அத்த மேகங்காள்!⋆ ஆவி காத்திருப்பேனே (3)

www.prapatti.com

மின் ஆகத்தெழுகின்ற⋆ மேகங்காள்⋆ வேங்கடத்துத்
தன் ஆகத் திருமங்கை⋆ தங்கிய சீர் மார்வற்கு⋆
என் ஆகத்திளங்கொங்கை⋆ விரும்பித் தாம் நாள் தோறும்⋆
15 பொன் ஆகம் புல்குதற்கு⋆ என் புரிவுடைமை செப்புமினே (4)

வான் கொண்டு கிளர்ந்தெழுந்த⋆ மா முகில்காள்!⋆ வேங்கடத்துத்
தேன் கொண்ட மலர் சிதறத்⋆ திரண்டேறிப் பொழிவீர்காள்⋆
ஊன் கொண்ட வள் உகிரால்⋆ இரணியனை உடல் இடந்தான்⋆
16 தான் கொண்ட சரி வளைகள்⋆ தருமாகில் சாற்றுமினே (5)

சலங்கொண்டு கிளர்ந்தெழுந்த⋆ தண் முகில்காள்!⋆ மா வலியை
நிலங்கொண்டான் வேங்கடத்தே⋆ நிரந்தேறிப் பொழிவீர்காள்⋆
உலங்குண்ட விளங்கனி போல்⋆ உள் மெலியப் புகுந்து⋆ என்னை
17 நலங்கொண்ட நாரணற்கு⋆ என் நடலை நோய் செப்புமினே (6)

‡சங்க மா கடல் கடைந்தான்⋆ தண் முகில்காள்!⋆ வேங்கடத்துச்
செங்கண் மால் சேவடிக் கீழ்⋆ அடி வீழ்ச்சி விண்ணப்பம்⋆
கொங்கை மேல் குங்குமத்தின்⋆ குழம்பழியப் புகுந்து⋆ ஒரு நாள்
18 தங்குமேல்⋆ என் ஆவி தங்குமென்றுரையீரே (7)

கார் காலத்தெழுகின்ற⋆ கார்முகில்காள்!⋆ வேங்கடத்துப்
போர் காலத்தெழுந்தருளிப்⋆ பொருதவனார் பேர் சொல்லி⋆
நீர் காலத் தெருக்கில்⋆ அம் பழவிலை போல் வீழ்வேனை⋆
19 வார் காலத்தொரு நாள்⋆ தம் வாசகம் தந்தருளாரே (8)

மத யானை போல் எழுந்த⋆ மா முகில்காள்!⋆ வேங்கடத்தைப்
பதியாக வாழ்வீர்காள்!⋆ பாம்பணையான் வார்த்தை என்னே⋆
கதி என்றும் தான் ஆவான்⋆ கருதாது⋆ ஓர் பெண் கொடியை
20 வதை செய்தான் என்னும் சொல்⋆ வையகத்தார் மதியாரே (9)

‡நாகத்தின் அணையானை⋆ நன்னுதலாள் நயந்துரை செய்
மேகத்தை⋆ வேங்கடக் கோன்⋆ விடு தூதில் விண்ணப்பம்⋆
போகத்தில் வழுவாத⋆ புதுவையர் கோன் கோதை தமிழ்⋆
21 ஆகத்து வைத்துரைப்பார் அவர்⋆ அடியார் ஆகுவரே (10)

## நாச்சியார் திருமொழி (1-10) - கார்க்கோடல் பூக்காள்

பாடும் குயில்காள்!⋆ ஈதென்ன பாடல்⋆ நல் வேங்கட
நாடர் நமக்கொரு வாழ்வு தந்தால்⋆ வந்து பாடுமின்⋆
ஆடும் கருளக் கொடி உடையார்⋆ வந்தருள் செய்து⋆
22 கூடுவர் ஆயிடில்⋆ கூவி நும் பாட்டுக்கள் கேட்டுமே (5)

மழையே! மழையே! மண் புறம்
பூசி⋆ உள்ளாய் நின்று⋆
மெழுகூற்றினாற் போல்⋆ ஊற்றுநல்
வேங்கடத்துள் நின்ற⋆
அழகப் பிரானார் தம்மை⋆ என்
நெஞ்சத்தகப்படத்-
தழுவி நின்று⋆ என்னைத் ததர்த்திக் கொண்டு⋆
23 ஊற்றவும் வல்லையே (8)

## பெருமாள் திருமொழி (1-4) - ஊனேறு

‡ஊனேறு செல்வத்து⋆ உடற் பிறவி யான் வேண்டேன்⋆
ஆனேறேழ் வென்றான்⋆ அடிமைத் திறம் அல்லால்⋆
கூனேறு சங்கம் இடத்தான் தன்⋆ வேங்கடத்துக்⋆
24 கோனேரி வாழும்⋆ குருகாய்ப் பிறப்பேனே (1)

ஆனாத செல்வத்து⋆ அரம்பையர்கள் தற் சூழ⋆
வான் ஆளும் செல்வமும்⋆ மண் அரசும் யான் வேண்டேன்⋆
தேன் ஆர் பூஞ்சோலைத்⋆ திருவேங்கடச் சுனையில்⋆
25 மீனாய்ப் பிறக்கும்⋆ விதி உடையேன் ஆவேனே (2)

பின்னிட்ட சடையானும்⋆ பிரமனும் இந்திரனும்⋆
துன்னிட்டுப் புகல் அரிய⋆ வைகுந்த நீள் வாசல்⋆
மின் வட்டச் சுடராழி⋆ வேங்கடக்கோன் தான் உமிழும்⋆
26 பொன் வட்டில் பிடித்துடனே⋆ புகப் பெறுவேன் ஆவேனே (3)

ஒண் பவள வேலை⋆ உலவு தண் பாற்கடலுள்⋆
கண் துயிலும் மாயோன்⋆ கழல் இணைகள் காண்பதற்கு⋆

பண் பகரும் வண்டினங்கள்⋆ பண் பாடும் வேங்கடத்துச்⋆
27 செண்பகமாய் நிற்கும்⋆ திருவுடையேன் ஆவேனே (4)

கம்ப மத யானை⋆ கழுத்தகத்தின் மேல் இருந்து⋆
இன்பமரும் செல்வமும்⋆ இவ் அரசும் யான் வேண்டேன்⋆
எம் பெருமான் ஈசன்⋆ எழில் வேங்கட மலை மேல்⋆
28 தம்பகமாய் நிற்கும்⋆ தவம் உடையேன் ஆவேனே (5)

மின் அனைய நுண்ணிடையார்⋆ உருப்பசியும் மேனகையும்⋆
அன்னவர்தம் பாடலொடும்⋆ ஆடல் அவை ஆதரியேன்⋆
தென்னவென வண்டினங்கள்⋆ பண் பாடும் வேங்கடத்துள்⋆
29 அன்னனைய பொற்குவடாம்⋆ அருந்தவத்தென் ஆவேனே (6)

வான் ஆளும் மா மதி போல்⋆ வெண் குடைக் கீழ்⋆ மன்னவர் தம்
கோன் ஆகி வீற்றிருந்து⋆ கொண்டாடும் செல்வறியேன்⋆
தேனார் பூஞ்சோலைத்⋆ திரு வேங்கட மலை மேல்⋆
30 கானாறாய்ப் பாயும்⋆ கருத்துடையேன் ஆவேனே (7)

பிறை ஏறு சடையானும்⋆ பிரமனும் இந்திரனும்⋆
முறையாய பெரு வேள்விக்⋆ குறை முடிப்பான் மறை ஆனான்⋆
வெறியார் தண் சோலைத்⋆ திரு வேங்கடமலை மேல்⋆
31 நெறியாய்க் கிடக்கும்⋆ நிலை உடையேன் ஆவேனே (8)

‡செடியாய வல்வினைகள்⋆ தீர்க்கும் திருமாலே⋆
நெடியானே! வேங்கடவா!⋆ நின் கோயிலின் வாசல்⋆
அடியாரும் வானவரும்⋆ அரம்பையரும் கிடந்தியங்கும்⋆
32 படியாய்க் கிடந்து⋆ உன் பவளவாய் காண்பேனே (9)

உம்பர் உலகாண்டு⋆ ஒரு குடைக் கீழ் உருப்பசி தன்⋆
அம் பொற் கலை அல்குல்⋆ பெற்றாலும் ஆதரியேன்⋆
செம் பவள வாயான்⋆ திருவேங்கடம் என்னும்⋆
33 எம் பெருமான் பொன்மலை மேல்⋆ ஏதேனும் ஆவேனே (10)

‡மன்னிய தண் சாரல்⋆ வட வேங்கடத்தான் தன்⋆
பொன்னியலும் சேவடிகள்⋆ காண்பான் புரிந்திறைஞ்சி⋆

கொன்னவிலும் கூர்வேல்⋆ குலசேகரன் சொன்ன⋆
34 பன்னிய நூல் தமிழ் வல்லார்⋆ பாங்காய பத்தர்களே (11)

## திருமழிசையாழ்வார் - திருச்சந்த விருத்தம்

குன்றில் நின்று வான் இருந்து⋆ நீள் கடல் கிடந்து⋆ மண்
ஒன்று சென்ற தொன்றை உண்டு⋆ அதொன்றிடந்து பன்றியாய்⋆
நன்று சென்ற நாளவற்றுள்⋆ நல்லுயிர் படைத்தவர்க்கு⋆
35 அன்று தேவ மைத்தளித்த⋆ ஆதி தேவன் அல்லையே (48)

‡செழுங்கொழும் பெரும்பனி⋆ பொழிந்திட⋆ உயர்ந்த வேய்
விழுந்துலர்ந்தெழுந்து⋆ விண் புடைக்கும் வேங்கடத்துள் நின்று⋆
எழுந்திருந்து தேன் பொருந்து⋆ பூம்பொழில் தழைக் கொழும்⋆
36 செழுந் தடங்குடந்தையுள்⋆ கிடந்த மாலும் அல்லையே (60)

நிற்பதும் ஓர் வெற்பகத்து⋆ இருப்பும் விண் கிடப்பதும்⋆
நற் பெருந் திரைக் கடலுள்⋆ நான் இலாத முன்னெலாம்⋆
அற்புதன் அனந்த சயனன்⋆ ஆதிபூதன் மாதவன்⋆
37 நிற்பதும் இருப்பதும்⋆ கிடப்பதும் என்நெஞ்சுளே (65)

கடைந்து பாற்கடல் கிடந்து⋆ காலநேமியைக் கடிந்து⋆
உடைந்த வாலி தன் தனக்கு⋆ உதவ வந்திராமனாய்⋆
மிடைந்த ஏழ் மரங்களும்⋆ அடங்க எய்து⋆ வேங்கடம்
38 அடைந்த மால பாதமே⋆ அடைந்து நாளும் உய்ம்மினோ (81)

## திருப்பாணாழ்வார் - அமலனாதி பிரான்

‡அமலன் ஆதி பிரான்⋆ அடியார்க்கென்னை ஆட்படுத்த
விமலன்⋆ விண்ணவர் கோன்⋆ விரையார் பொழில் வேங்கடவன்⋆
நிமலன் நின்மலன் நீதி வானவன்⋆ நீள் மதிள் அரங்கத்தம்மான்⋆ திருக்-
39 கமல பாதம் வந்து⋆ என் கண்ணின் உள்ளன ஒக்கின்றதே (1)

‡மந்தி பாய்⋆ வட வேங்கட மா மலை⋆ வானவர்கள்
சந்தி செய்ய நின்றான்⋆ அரங்கத்தரவின் அணையான்⋆

www.prapatti.com

அந்தி போல் நிறத்தாடையும்⋆ அதன்
    மேல் அயனைப் படைத்ததோர் எழில்⋆
40 உந்தி மேலதன்றோ⋆ அடியேன் உள்ளத்தின் உயிரே (3)

## பெரிய திருமொழி (1-8) - கொங்கலர்ந்த

‡கொங்கலர்ந்த மலர்க் குருந்தம்
    ஒசித்த⋆ கோவலன் எம் பிரான்⋆
சங்கு தங்கு தடங்கடல் துயில்
    கொண்ட⋆ தாமரைக் கண்ணினன்⋆
பொங்கு புள்ளினை வாய் பிளந்த⋆
    புராணர் தம் இடம்⋆ பொங்கு நீர்ச்
செங்கயல் திளைக்கும் சுனைத்⋆ திரு-
41 வேங்கடம் அடை நெஞ்சமே (1)

‡பள்ளி ஆவது பாற்கடல் அரங்கம்⋆
    இரங்க வன் பேய் முலை⋆
பிள்ளையாய் உயிர் உண்ட எந்தை⋆
    பிரான் அவன் பெருகும் இடம்⋆
வெள்ளியான் கரியான்⋆ மணி நிற
    வண்ணன் என்றெண்ணி⋆ நாள் தொறும்
தெள்ளியார் வணங்கும் மலை⋆ திரு-
42 வேங்கடம் அடை நெஞ்சமே (2)

நின்ற மா மருதிற்று வீழ⋆
    நடந்த நின்மலன் நேமியான்⋆
என்றும் வானவர் கை தொழும்⋆ இணைத்
    தாமரை அடி எம் பிரான்⋆
கன்றி மாரி பொழிந்திடக்⋆ கடி-
    தாநிரைக்கிடர் நீக்குவான்⋆
சென்று குன்றம் எடுத்தவன்⋆ திரு-
43 வேங்கடம் அடை நெஞ்சமே (3)

www.prapatti.com

பார்த்தற்காய் அன்று பாரதம் கை செய்-
　　திட்டு⋆ வென்ற பரஞ்சுடர்⋆
கோத்தங்காயர் தம் பாடியில்⋆ குரவை
　　பிணைந்த எம் கோவலன்⋆
ஏத்துவார் தம் மனத்துள்ளான்⋆ இட-
　　வெந்தை மேவிய எம் பிரான்⋆
தீர்த்த நீர்த் தடம் சோலை சூழ்⋆ திரு-
44　　வேங்கடம் அடை நெஞ்சமே (4)

வண் கையான் அவுணர்க்கு நாயகன்⋆
　　வேள்வியில் சென்று மாணியாய்⋆
மண் கையால் இரந்தான்⋆ மராமரம்
　　ஏழும் எய்த வலத்தினான்⋆
எண் கையான் இமயத்துள்ளான்⋆ இருஞ்
　　சோலை மேவிய எம் பிரான்⋆
திண் கைம்மா துயர் தீர்த்தவன்⋆ திரு-
45　　வேங்கடம் அடை நெஞ்சமே (5)

எண் திசைகளும் ஏழ் உலகமும்
　　வாங்கிப்⋆ பொன் வயிற்றில் பெய்து⋆
பண்டோர் ஆல் இலைப் பள்ளி கொண்டவன்⋆
　　பால் மதிக்கிடர் தீர்த்தவன்⋆
ஒண் திறல் அவுணன் உரத்துகிர்
　　வைத்தவன்⋆ ஒள் எயிற்றொடு⋆
திண் திறல் அரியாயவன்⋆ திரு-
46　　வேங்கடம் அடை நெஞ்சமே (6)

பாரும் நீர் எரி காற்றினொடு⋆
　　ஆகாசமும் இவை ஆயினான்⋆
பேரும் ஆயிரம் பேச நின்ற⋆
　　பிறப்பிலி பெருகும் இடம்⋆
காரும் வார் பனி நீள் விசும்பிடைச்⋆
　　சோரு மா முகில் தோய் தர⋆

சேரும் வார் பொழில் சூழ்⋆ எழில் திரு-
47 வேங்கடம் அடை நெஞ்சமே (7)

அம்பரம் அனல் கால் நிலம்⋆ சலம்
ஆகி நின்ற அமரர் கோன்⋆
வம்புலா மலர்மேல்⋆ மலி மட
மங்கை தன் கொழுநன் அவன்⋆
கொம்பின் அன்ன இடை மடக் குற
மாதர்⋆ நீளிதணந்தொறும்⋆
செம் புனம் அவை காவல் கொள்⋆ திரு-
48 வேங்கடம் அடை நெஞ்சமே (8)

‡பேசுமின் திருநாமம் எட்டெழுத்தும்⋆
சொல்லி நின்று பின்னரும்⋆
பேசுவார் தமை உய்ய வாங்கிப்⋆
பிறப்பறுக்கும் பிரான் இடம்⋆
வாச மா மலர் நாறு வார்⋆ பொழில்
சூழ் தரும் உலகுக்கெல்லாம்⋆
தேசமாய்த் திகழும் மலைத்⋆ திரு-
49 வேங்கடம் அடை நெஞ்சமே (9)

‡செங்கயல் திளைக்கும் சுனைத்⋆ திரு-
வேங்கடத்துறை செல்வனை⋆
மங்கையர் தலைவன் கலிகன்றி⋆
வண் தமிழ்ச் செஞ்சொல் மாலைகள்⋆
சங்கை இன்றித்தரித்துரைக்கவல்-
லார்கள்⋆ தஞ்சமதாகவே⋆
வங்க மா கடல் வையம் காவலர்
50 ஆகி⋆ வான் உலகாள்வரே (10)

## பெரிய திருமொழி (1-9) - தாயே தந்தை

‡தாயே தந்தை என்றும்⋆ தாரமே கிளை மக்கள் என்றும்⋆
நோயே பட்டொழிந்தேன்⋆ நுன்னைக் காண்பதோர் ஆசையினால்⋆

www.prapatti.com

வேயேய் பூம் பொழில் சூழ்⋆ விரையார் திருவேங்கடவா!⋆
51 நாயேன் வந்தடைந்தேன்⋆ நல்கி ஆள் என்னைக் கொண்டருளே (1)

மானேய் கண் மடவார்⋆ மயக்கில் பட்டு⋆ மா நிலத்து
நானே நானாவித⋆ நரகம் புகும் பாவம் செய்தேன்⋆
தேனேய் பூம் பொழில் சூழ்⋆ திருவேங்கட மாமலை⋆ என்
52 ஆனாய் வந்தடைந்தேன்⋆ அடியேனை ஆட் கொண்டருளே (2)

கொன்றேன் பல் உயிரைக்⋆ குறிக்கோள் ஒன்றிலாமையினால்⋆
என்றேனும் இரந்தார்க்கு⋆ இனிதாக உரைத்தறியேன்⋆
குன்றேய் மேகம் அதிர்⋆ குளிர் மா மலை வேங்கடவா!⋆
53 அன்றே வந்தடைந்தேன்⋆ அடியேனை ஆட் கொண்டருளே (3)

குலந் தான் எத்தனையும்⋆ பிறந்தே இறந்தெய்த்தொழிந்தேன்⋆
நலந் தான் ஒன்றும் இலேன்⋆ நல்லதோர் அறம் செய்தும் இலேன்⋆
நிலம் தோய் நீள் முகில் சேர்⋆ நெறியார் திருவேங்கடவா!⋆
54 அலந்தேன் வந்தடைந்தேன்⋆ அடியேனை ஆட் கொண்டருளே (4)

எப் பாவம் பலவும்⋆ இவையே செய்திளைத்தொழிந்தேன்⋆
துப்பா! நின் அடியே⋆ தொடர்ந்தேத்தவும் கிற்கின்றிலேன்⋆
செப்பார் திண்வரை சூழ்⋆ திருவேங்கட மாமலை⋆ என்
55 அப்பா! வந்தடைந்தேன்⋆ அடியேனை ஆட் கொண்டருளே (5)

மண்ணாய் நீர் எரி கால்⋆ மஞ்சுலாவும் ஆகாசமுமாம்⋆
புண்ணார் ஆக்கை தன்னுள்⋆ புலம்பித்தளர்ந்தெய்த்தொழிந்தேன்⋆
விண்ணார் நீள் சிகர⋆ விரையார் திருவேங்கடவா!⋆
56 அண்ணா! வந்தடைந்தேன்⋆ அடியேனை ஆட் கொண்டருளே (6)

தெரியேன் பாலகனாய்ப்⋆ பல தீமைகள் செய்துமிட்டேன்⋆
பெரியேன் ஆயின பின்⋆ பிறர்க்கே உழைத்து ஏழை ஆனேன்⋆
கரி சேர் பூம் பொழில் சூழ்⋆ கன மா மலை வேங்கடவா!⋆
57 அரியே! வந்தடைந்தேன்⋆ அடியேனை ஆட் கொண்டருளே (7)

நோற்றேன் பல் பிறவி⋆ நுன்னைக் காண்பதோர் ஆசையினால்⋆
ஏற்றேன் இப் பிறப்பே⋆ இடர் உற்றனன் எம் பெருமான்!⋆

www.prapatti.com

கோல் தேன் பாய்ந்தொழுகும்⋆ குளிர் சோலை சூழ் வேங்கடவா!⋆
58 ஆற்றேன் வந்தடைந்தேன்⋆ அடியேனை ஆட் கொண்டருளே (8)

பற்றேல் ஒன்றும் இலேன்⋆ பாவமே செய்து பாவி ஆனேன்⋆
மற்றேல் ஒன்றறியேன்⋆ மாயனே! எங்கள் மாதவனே!⋆
கல் தேன் பாய்ந்தொழுகும்⋆ கமலச்சுனை வேங்கடவா!
59 அற்றேன் வந்தடைந்தேன்⋆ அடியேனை ஆட் கொண்டருளே (9)

‡கண்ணாய் ஏழுலகுக்குயிராய⋆ எங்கார் வண்ணனை⋆
விண்ணோர் தாம் பரவும்⋆ பொழில் வேங்கட வேதியனை⋆
திண்ணார் மாடங்கள் சூழ்⋆ திரு மங்கையர் கோன் கலியன்⋆
60 பண்ணார் பாடல் பத்தும்⋆ பயில்வார்க்கில்லை பாவங்களே (10)

## பெரிய திருமொழி (1-10) - கண்ணார் கடல்சூழ்

‡கண்ணார் கடல் சூழ்⋆ இலங்கைக்கிறைவன் தன்⋆
திண்ணாகம் பிளக்கச்⋆ சரம் செல உய்த்தாய்!⋆
விண்ணோர் தொழும்⋆ வேங்கட மா மலை மேய⋆
61 அண்ணா!⋆ அடியேன் இடரைக் களையாயே (1)

இலங்கைப் பதிக்கு⋆ அன்றிறையாய⋆ அரக்கர்
குலம் கெட்டவர் மாளக்⋆ கொடிப் புள் திரித்தாய்!⋆
விலங்கல் குடுமித்⋆ திருவேங்கடம் மேய⋆
62 அலங்கல் துளப முடியாய்!⋆ அருளாயே (2)

நீரார் கடலும்⋆ நிலனும் முழுதுண்டு⋆
ஏர் ஆலம் இளந் தளிர்மேல்⋆ துயில் எந்தாய்!⋆
சீரார்⋆ திருவேங்கட மா மலை மேய⋆
63 ஆரா அமுதே!⋆ அடியேற்கருளாயே (3)

உண்டாய் உறிமேல்⋆ நறு நெய் அமுதாக⋆
கொண்டாய் குறளாய்⋆ நிலம் ஈர் அடியாலே⋆
விண் தோய் சிகரத்⋆ திருவேங்கடம் மேய⋆
64 அண்டா! அடியேனுக்கு⋆ அருள் புரியாயே (4)

தூணாய் அதனூடு⋆ அரியாய் வந்து தோன்றி⋆
பேணா அவுணன் உடலம்⋆ பிளந்திட்டாய்!⋆
சேணார்⋆ திருவேங்கட மா மலை மேய⋆
65 கோள் நாகணையாய்!⋆ குறிக்கொள் எனை நீயே (5)

மன்னா⋆ இம் மனிசப் பிறவியை நீக்கி⋆
தன்னாக்கித்⋆ தன் இன்னருள் செய்யும் தலைவன்⋆
மின்னார் முகில் சேர்⋆ திருவேங்கடம் மேய⋆
66 என் ஆனை என் அப்பன்⋆ என் நெஞ்சில் உளானே (6)

மானேய் மட நோக்கி⋆ திறத்தெதிர் வந்த⋆
ஆனேய் விடை செற்ற⋆ அணி வரைத் தோளா!⋆
தேனே!⋆ திருவேங்கட மா மலை மேய⋆
67 கோனே! என் மனம்⋆ குடி கொண்டிருந்தாயே (7)

சேயன் அணியன்⋆ என சிந்தையுள் நின்ற
மாயன்⋆ மணி வாள் ஒளி⋆ வெண் தரளங்கள்⋆
வேய் விண்டுதிர்⋆ வேங்கட மா மலை மேய⋆
68 ஆயன் அடி அல்லது⋆ மற்றறியேனே (8)

வந்தாய் என் மனம் புகுந்தாய்⋆ மன்னி நின்றாய்⋆
நந்தாத கொழுஞ்சுடரே⋆ எங்கள் நம்பீ!⋆
சிந்தாமணியே⋆ திருவேங்கடம் மேய
69 எந்தாய்!⋆ இனி யான் உன்னை⋆ என்றும் விடேனே (9)

‡வில்லார் மலி⋆ வேங்கட மா மலை மேய⋆
மல்லார் திரள் தோள்⋆ மணி வண்ணன் அம்மானைக்⋆
கல்லார் திரள் தோள்⋆ கலியன் சொன்ன மாலை⋆
70 வல்லார் அவர்⋆ வானவர் ஆகுவர் தாமே (10)

## பெரிய திருமொழி (2-1) - வானவர்

‡வானவர் தங்கள் சிந்தை போல⋆ என்
நெஞ்சமே! இனிதுவந்து⋆ மா தவ
மானவர் தங்கள் சிந்தை⋆ அமர்ந்துறைகின்ற எந்தை⋆

www.prapatti.com

கானவர் இடு கார் அகில் புகை⋆
ஓங்கு வேங்கடம் மேவி⋆ மாண் குறள்
71 ஆன அந்தணற்கு⋆ இன்றடிமைத் தொழில் பூண்டாயே (1)

உறவு சுற்றம் என்றொன்றிலா⋆ ஒருவன்
உகந்தவர் தம்மை⋆ மண்மிசைப்
பிறவியே கெடுப்பான்⋆ அது கண்டென் நெஞ்சம் என்பாய்⋆
குறவர் மாதர்களோடு⋆ வண்டு
குறிஞ்சி மருள் இசை பாடும் வேங்கடத்து⋆
72 அறவ நாயகற்கு⋆ இன்றடிமைத் தொழில் பூண்டாயே (2)

இண்டையாயின கொண்டு⋆ தொண்டர்கள்
ஏத்துவார் உறவோடும்⋆ வானிடைக்
கொண்டு போய் இடவும்⋆ அது கண்டென் நெஞ்சம் என்பாய்⋆
வண்டு வாழ் வட வேங்கட மலை⋆
கோயில் கொண்டதனோடும்⋆ மீமிசை
73 அண்டம் ஆண்டிருப்பாற்கு⋆ அடிமைத் தொழில் பூண்டாயே (3)

பாவியாது செய்தாய் என் நெஞ்சமே!⋆
பண்டு தொண்டு செய்தாரை⋆ மண்மிசை
மேவி ஆட்கொண்டு போய்⋆ விசும்பேற வைக்கும் எந்தை⋆
கோவி நாயகன் கொண்டல் உந்துயர்⋆
வேங்கட மலை ஆண்டு⋆ வானவர்
74 ஆவியாய் இருப்பாற்கு⋆ அடிமைத் தொழில் பூண்டாயே (4)

பொங்கு போதியும் பிண்டியுமுடைப்⋆
புத்தர் நோன்பியர் பள்ளியுள் உறை⋆
தங்கள் தேவரும் தாங்களுமே ஆக⋆ என் நெஞ்சம் என்பாய்⋆
எங்கும் வானவர் தானவர் நிறைந்-
தேத்தும்⋆ வேங்கடம் மேவி நின்றருள்⋆
75 அங்கணாயகற்கு⋆ இன்றடிமைத் தொழில் பூண்டாயே (5)

துவரி ஆடையர் மட்டையர்⋆ சமண்
தொண்டர்கள் மண்டி உண்டு பின்னரும்⋆

தமரும் தாங்களுமே தடிக்க⋆ என் நெஞ்சம் என்பாய்⋆
கவரி மாக் கணம் சேரும்⋆ வேங்கடம்
கோயில் கொண்ட கண் ஆர் விசும்பிடை⋆
76 அமர நாயகற்கு⋆ இன்றடிமைத் தொழில் பூண்டாயே (6)

தருக்கினால் சமண் செய்து⋆ சோறு தண்
தயிரினால் திரளை⋆ மிடற்றிடை
நெருக்குவார் அலக்கண்⋆ அது கண்டென் நெஞ்சம் என்பாய்⋆
மருட்கள் வண்டுகள் பாடும்⋆ வேங்கடம்
கோயில் கொண்டதனோடும்⋆ வானிடை
77 அருக்கன் மேவி நிற்பாற்கு⋆ அடிமைத் தொழில் பூண்டாயே (7)

சேயன் அணியன் சிறியன் பெரியன்
என்பதும்⋆ சிலர் பேசக் கேட்டிருந்தே⋆
என் நெஞ்சம் என்பாய்!⋆ எனக்கொன்று சொல்லாதே⋆
வேய்கள் நின்று வெண் முத்தமே சொரி⋆
வேங்கட மலை கோயில் மேவிய⋆
78 ஆயர் நாயகற்கு⋆ இன்றடிமைத் தொழில் பூண்டாயே (8)

கூடி ஆடி உரைத்ததே உரைத்தாய்⋆
என் நெஞ்சம் என்பாய்! துணிந்து கேள்⋆
பாடி ஆடிப் பலரும்⋆ பணிந்தேத்திக் காண்கிலார்⋆
ஆடு தாமரையோனும் ஈசனும்⋆
அமரர் கோனும் நின்றேத்தும்⋆ வேங்கட-
79 த்தாடு கூத்தனுக்கு⋆ இன்றடிமைத் தொழில் பூண்டாயே (9)

‡மின்னு மா முகில் மேவு⋆ தண் திரு-
வேங்கட மலை கோயில் மேவிய⋆
அன்னமாய் நிகழ்ந்த⋆ அமரர் பெருமானை⋆
கன்னி மா மதிள் மங்கையர் கலி-
கன்றி⋆ இன் தமிழால் உரைத்த⋆ இம்
80 மன்னு பாடல் வல்லார்க்கு⋆ இடம் ஆகும் வான் உலகே (10)

www.prapatti.com

### பெரிய திருமொழி (4-3) - பேரணிந்து

‡அன்றிய வாணன் ஆயிரம் தோளும்
துணிய⋆ அன்றாழி தொட்டானை⋆
மின் திகழ் குடுமி வேங்கட மலை மேல்⋆
மேவிய வேத நல் விளக்கை⋆
தென் திசைத்திலதம் அனையவர் நாங்கைச்⋆
செம் பொன்செய் கோயிலினுள்ளே⋆
மன்றது பொலிய மகிழ்ந்து நின்றானை⋆
81 வணங்கி நான் வாழ்ந்தொழிந்தேனே (8)

### பெரிய திருமொழி (4-7) - கண்ணார் கடல்

‡வேடார்⋆ திருவேங்கடம் மேய விளக்கே⋆
நாடார் புகழ்⋆ வேதியர் மன்னிய நாங்கூர்⋆
சேடார் பொழில் சூழ்⋆ திருவெள்ளக் குளத்தாய்⋆
82 பாடா வருவேன்⋆ வினை ஆயின பாற்றே (5)

### பெரிய திருமொழி (5-3) - வென்றிமா

வாம்பரியுக மன்னர் தம் உயிர் செக⋆
ஐவர்கட்கரசளித்த⋆
காம்பின் ஆர் திரு வேங்கடப் பொருப்ப!⋆
நின் காதலை அருள் எனக்கு⋆
மாம் பொழில் தளிர் கோதிய மடக் குயில்⋆
வாய் அது துவர்ப்பெய்த⋆
தீம்பலங்கனித் தேன் அது நுகர்⋆
83 திருவெள்ளறை நின்றானே (4)

### பெரிய திருமொழி (5-5) - வெருவாதாள்

‡வெருவாதாள் வாய்வெருவி⋆ வேங்கடமே!
வேங்கடமே! என்கின்றாளால்⋆

மருவாளாள் என் குடங்கால்⋆ வாள் நெடுங்கண்
 துயில் மறந்தாள்⋆ வண்டார் கொண்டல்
உருவாளன் வானவர் தம் உயிராளன்⋆
 ஒலி திரை நீர்ப் பௌவம் கொண்ட
திருவாளன்⋆ என் மகளைச் செய்தனகள்⋆
84 எங்ஙனம் நான் சிந்திக்கேனே (1)

## பெரிய திருமொழி (5-6) - கைம்மானம்

‡சிந்தனையைத் தவநெறியைத்⋆ திருமாலை⋆ பிரியாது
 வந்தெனது மனத்திருந்த⋆ வடமலையை⋆ வரி வண்டார்
கொந்தணைந்த பொழிற் கோவல்⋆ உலகளப்பான் அடி நிமிர்த்த
85 அந்தணனை⋆ யான் கண்டது⋆ அணி நீர்த் தென் அரங்கத்தே (7)

## பெரிய திருமொழி (6-8) - மான் கொண்ட

‡மான் கொண்ட தோல்⋆ மார்வின் மாணியாய்⋆ மாவலி மண்
 தான் கொண்டு⋆ தாளால் அளந்த பெருமானை⋆
தேன் கொண்ட சாரல்⋆ திருவேங்கடத்தானை⋆
86 நான் சென்று நாடி⋆ நறையூரில் கண்டேனே (1)

## பெரிய திருமொழி (7-1) - கறவா மடநாகு

தாரேன் பிறர்க்கு⋆ உன் அருள் என்னிடை வைத்தாய்⋆
 ஆரேன் அதுவே⋆ பருகிக் களிக்கின்றேன்⋆
காரேய் கடலே மலையே⋆ திருக்கோட்டி
87 ஊரே⋆ உகந்தாயை⋆ உகந்தடியேனே (3)

## பெரிய திருமொழி (7-3) - சினவில்

ஆங்கு வெந்நரகத்தழுந்தும் போது⋆
 அஞ்சேல் என்றடியேனை அங்கே வந்து
தாங்கு⋆ தாமரை அன்ன பொன்னார் அடி



www.prapatti.com

எம்பிரானை⋆ உம்பர்க்கணியாய் நின்ற⋆
வேங்கடத்தரியைப் பரி கீறியை⋆
வெண்ணெய் உண்டுரலினிடை ஆப்புண்ட
தீங்கரும்பினை⋆ தேனை நன் பாலினை
88 அன்றி⋆ என் மனம் சிந்தை செய்யாதே (5)

## பெரிய திருமொழி (7-10) - பெரும் புறக்கடலை

எங்களுக்கருள் செய்கின்ற ஈசனை⋆
வாசவார் குழலாள் மலை மங்கை தன்
பங்கனைப்⋆ பங்கில் வைத்துகந்தான் தன்னைப்⋆
பான்மையைப் பனி மா மதியம் தவழ்⋆
மங்குலைச் சுடரை வட மாமலை
உச்சியை⋆ நச்சி நாம் வணங்கப்படும்
கங்குலை⋆ பகலைச் சென்றுநாடிக்⋆
89 கண்ண மங்கையுள் கண்டு கொண்டேனே (3)

## பெரிய திருமொழி (8-2) - தெள்ளியீர்

‡அருவி சோர் வேங்கடம்⋆ நீர்மலை என்று வாய்
வெருவினாள்⋆ மெய்யம் வினவி இருக்கின்றாள்⋆
பெருகு சீர்க்⋆ கண்ணபுரம் என்று பேசினாள்
90 உருகினாள்⋆ உள்மெலிந்தாள்⋆ இதுவென்கொலோ (3)

வட வரை நின்றும் வந்து⋆ இன்று கணபுரம்⋆
இடவகை கொள்வது⋆ யாம் என்று பேசினாள்⋆
மடவரல் மாதர் என் பேதை⋆ இவர்க்கிவள்
91 கடவதென்⋆ கண் துயில்⋆ இன்றிவர் கொள்ளவே (6)

## பெரிய திருமொழி (9-7) - தந்தைதாய்

பண்ணுலாம் மென் மொழிப் பாவைமார்⋆
பணைமுலை அணைதும் நாம் என்று⋆

www.prapatti.com

எண்ணுவார் எண்ணமதொழித்து⋆ நீ
    பிழைத்துய்யக் கருதினாயேல்⋆
விண்ணுளார் விண்ணின் மீதியன்ற⋆
    வேங்கடத்துளார்⋆ வளங்கொள் முந்நீர்
வண்ணனார் வல்லவாழ்⋆ சொல்லுமா
92 வல்லையாய் மருவு நெஞ்சே! (4)

### பெரிய திருமொழி (9-9) - மூவரில்

‡வலம்புரி ஆழியனை⋆ வரையார் திரள் தோளன் தன்னை⋆
    புலம்புரி நூலவனைப்⋆ பொழில் வேங்கட வேதியனை⋆
சிலம்பியல் ஆறுடைய⋆ திருமாலிருஞ்சோலை நின்ற⋆
93 நலந் திகழ் நாரணனை⋆ நணுகுங்கொல் என் நன் நுதலே (9)

### பெரிய திருமொழி (10-1) - ஒருநல் சுற்றம்

‡பொன்னை மா மணியை⋆ அணி ஆர்ந்ததோர்
    மின்னை⋆ வேங்கடத்துச்சியில்⋆ கண்டு போய்⋆
என்னை ஆளுடை ஈசனை⋆ எம்பிரான்
94 தன்னை⋆ யாம் சென்று காண்டும்⋆ தண் காவிலே (2)

### பெரிய திருமொழி (10-9) - புள்ளுருவாகி

மன்றில் மலிந்து கூத்து வந்தாடி⋆
    மால் விடை ஏழும் அடர்த்து⋆ ஆயர்
அன்று நடுங்க ஆனிரை காத்த⋆
    ஆண்மை கொலோ அறியேன் நான்⋆
நின்ற பிரானே! நீள் கடல் வண்ணா!⋆
    நீ இவள் தன்னை நின் கோயில்⋆
முன்றில் எழுந்த முருங்கையில் தேனா⋆
95 முன் கை வளை கவர்ந்தாயே (2)

www.prapatti.com

## பெரிய திருமொழி (10-10) - திருத்தாய்

‡சொல்லாய் பைங்கிளியே⋆
சுடராழி வலன் உயர்த்த⋆
மல்லார் தோள்⋆ வட வேங்கடவனை வர⋆
96 சொல்லாய் பைங்கிளியே! (5)

## பெரிய திருமொழி (11-3) - மன்னிலங்கு

கண்ணன் மனத்துள்ளே⋆ நிற்கவும்⋆ கைவளைகள்
என்னோ கழன்ற⋆ இவையென்ன மாயங்கள்⋆
பெண்ணானோம்⋆ பெண்மையோம் நிற்க⋆ அவன் மேய
97 அண்ணல் மலையும்⋆ அரங்கமும் பாடோமே (7)

## பெரிய திருமொழி (11-5) - மானமரும்

‡கள்ளத்தால் மாவலியை⋆ மூவடி மண் கொண்டளந்தான்⋆
வெள்ளத்தான் வேங்கடத்தான்⋆ என்பரால் காணேடீ⋆
வெள்ளத்தான்⋆ வேங்கடத்தானேலும்⋆ கலிகன்றி
98 உள்ளத்தின் உள்ளே⋆ உளன் கண்டாய் சாழலே (10)

## திருமங்கையாழ்வார் - திருக்குறுந்தாண்டகம்

இம்மையை மறுமை தன்னை⋆ எமக்கு வீடாகி நின்ற⋆
மெய்ம்மையை விரிந்த சோலை⋆ வியன் திருவரங்கம் மேய⋆
செம்மையைக் கருமை தன்னைத்⋆ திருமலை ஒருமையானை⋆
99 தன்மையை நினைவார் என்தன்⋆ தலைமிசை மன்னுவாரே (7)

## திருமங்கையாழ்வார் - திருநெடுந்தாண்டகம்

‡நீரகத்தாய்! நெடுவரையின் உச்சி மேலாய்!⋆
நிலாத்திங்கள் துண்டத்தாய்! நிறைந்த கச்சி
ஊரகத்தாய்⋆ ஒண் துறை நீர் வெஃகா உள்ளாய்!⋆

உள்ளுவார் உள்ளத்தாய்⋆ உலகம் ஏத்தும்
காரகத்தாய்! கார்வானத்துள்ளாய்! கள்வா!⋆
காமரு பூங்காவிரியின் தென்பால் மன்னு
பேரகத்தாய்⋆ பேராதென் நெஞ்சின் உள்ளாய்!⋆
100 பெருமான் உன் திருவடியே பேணினேனே (8)

வங்கத்தால் மா மணி வந்துந்து முந்நீர்
மல்லையாய்!⋆ மதிள் கச்சி ஊராய்! பேராய்⋆
கொங்கத்தார் வளங்கொன்றை அலங்கல் மார்வன்⋆
குலவரையன் மடப் பாவை இடப்பால் கொண்டான்⋆
பங்கத்தாய்! பாற்கடலாய்! பாரின் மேலாய்!⋆
பனி வரையின் உச்சியாய்! பவள வண்ணா⋆
எங்குற்றாய் எம் பெருமான்! உன்னை நாடி⋆
101 ஏழையேன் இங்ஙனமே உழிதருகேனே! (9)

பொன் ஆனாய்! பொழில் ஏழும் காவல் பூண்ட
புகழ் ஆனாய்!⋆ இகழ்வாய தொண்டனேன் நான்⋆
என் ஆனாய் என் ஆனாய் என்னல் அல்லால்⋆
என் அறிவன் ஏழையேன்⋆ உலகம் ஏத்தும்
தென் ஆனாய் வட ஆனாய் குடபால் ஆனாய்⋆
குணபால மதயானாய் இமையோர்க்கென்றும்
முன் ஆனாய்⋆ பின் ஆனார் வணங்கும் சோதி!⋆
102 திருமூழிக் களத்தானாய் முதல் ஆனாயே! (10)

‡கன்று மேய்த்தினிதுகந்த காளாய்! என்றும்⋆
கடி பொழில் சூழ் கணபுரத்தென் கனியே! என்றும்⋆
மன்றமரக் கூத்தாடி மகிழ்ந்தாய்! என்றும்⋆
வட திருவேங்கடம் மேய மைந்தா! என்றும்⋆
வென்றசுரர் குலம் களைந்த வேந்தே! என்றும்⋆
விரி பொழில் சூழ் திருநறையூர் நின்றாய்! என்றும்⋆
துன்று குழல் கருநிறத்தென் துணையே என்றும்⋆
103 துணை முலைமேல் துளி சோரச் சோர்கின்றாளே! (16)

www.prapatti.com

## திருவாய்மொழி (1-8) - ஓடும்புள்

கண்ணாவான் என்றும்⋆ மண்ணோர் விண்ணோர்க்கு⋆
104 தண்ணார் வேங்கட⋆ விண்ணோர் வெற்பனே (3)

## திருவாய்மொழி (2-1) - வாயும் திரை

கடலும் மலையும்⋆ விசும்பும் துழாய் எம் போல்⋆
சுடர் கொள் இராப்பகல்⋆ துஞ்சாயால் தண் வாடாய்⋆
அடல் கொள் படையாழி⋆ அம்மானைக் காண்பான் நீ⋆
105 உடலம் நோய் உற்றாயோ⋆ ஊழிதோறூழியே (4)

## திருவாய்மொழி (2-6) - வைகுந்தா

எந்தாய்! தண் திருவேங்கடத்துள்
நின்றாய்⋆ இலங்கை செற்றாய்⋆ மராமரம்
பைந்தாள் ஏழ் உருவ⋆ ஒரு வாளி
கோத்த வில்லா⋆
கொந்தார் தண்ணந் துழாயினாய் அமுதே⋆
உன்னை என்னுள்ளே குழைத்த எம்
மைந்தா⋆ வான் ஏறே⋆
106 இனி எங்குப் போகின்றதே (9)

போகின்ற காலங்கள் போய காலங்கள்⋆
போகு காலங்கள்⋆ தாய் தந்தை உயிர்
ஆகின்றாய்⋆ உன்னை நான்
அடைந்தேன் விடுவேனோ⋆
பாகின்ற தொல் புகழ் மூவுலகுக்கும்⋆
நாதனே! பரமா⋆ தண் வேங்கடம்
மேகின்றாய்⋆ தண் துழாய்
107 விரை நாறு கண்ணியனே (10)

www.prapatti.com

## திருவாய்மொழி (2-7) - கேசவன் தமர்

பற்பநாபன் உயர்வற உயரும்⋆ பெரும் திறலோன்⋆
எற்பரன் என்னை ஆக்கிக் கொண்டு⋆ எனக்கே தன்னைத் தந்த
கற்பகம்⋆ என் அமுதம் கார் முகில் போலும்⋆ வேங்கட நல்
108 வெற்பன்⋆ விசும்போர் பிரான்⋆ எந்தை தாமோதரனே (11)

## திருவாய்மொழி (3-3) - ஒழிவில் காலம்

‡ஒழிவில் காலம் எல்லாம்⋆ உடனாய் மன்னி⋆
வழுவிலா அடிமை⋆ செய்ய வேண்டும் நாம்⋆
தெழி குரல் அருவித்⋆ திருவேங்கடத்து⋆
109 எழில் கொள் சோதி⋆ எந்தை தந்தை தந்தைக்கே (1)

எந்தை தந்தை தந்தை⋆ தந்தை தந்தைக்கும்
முந்தை⋆ வானவர்⋆ வானவர் கோனொடும்⋆
சிந்து பூ மகிழும்⋆ திருவேங்கடத்து⋆
110 அந்த மில் புகழ்க்⋆ கார் எழில் அண்ணலே (2)

அண்ணல் மாயன்⋆ அணி கொள் செந்தாமரைக்-
கண்ணன்⋆ செங்கனி வாய்க்⋆ கருமாணிக்கம்⋆
தெண்ணிறைச் சுனை நீர்த்⋆ திருவேங்கடத்து⋆
111 எண்ணில் தொல் புகழ்⋆ வானவர் ஈசனே (3)

ஈசன் வானவர்க்கு⋆ என்பன் என்றால்⋆ அது
தேசமோ⋆ திருவேங்கடத் தானுக்கு⋆
நீசனேன்⋆ நிறைவொன்றும் இலேன்⋆ என் கண்
112 பாசம் வைத்த⋆ பரஞ்சுடர்ச் சோதிக்கே (4)

சோதியாகி⋆ எல்லா உலகும் தொழும்⋆
ஆதி மூர்த்தி என்றால்⋆ அளவாகுமோ⋆
வேதியர்⋆ முழு வேதத்தமுதத்தை⋆
113 தீதில் சீர்த்⋆ திருவேங்கடத் தானையே (5)

வேங்கடங்கள்⋆ மெய்ம்மேல் வினை முற்றவும்⋆
தாங்கள் தங்கட்கு⋆ நல்லனவே செய்வார்⋆

www.prapatti.com

வேங்கடத்துறை வார்க்கு⋆ நமவென்ன-
114 லாம் கடமை⋆ அதுசுமந்தார்கட்கே (6)

சுமந்து மாமலர்⋆ நீர் சுடர் தூபம் கொண்டு⋆
அமர்ந்து வானவர்⋆ வானவர் கோனொடும்⋆
நமன்றெழும்⋆ திருவேங்கடம் நங்கட்கு⋆
115 சமன் கொள் வீடு தரும்⋆ தடங்குன்றமே (7)

‡குன்றம் ஏந்திக்⋆ குளிர் மழை காத்தவன்⋆
அன்று ஞாலம்⋆ அளந்த பிரான்⋆ பரன்
சென்று சேர்⋆ திருவேங்கட மா மலை⋆
116 ஒன்றுமே தொழ⋆ நம் வினை ஓயுமே (8)

ஓயும் மூப்புப்⋆ பிறப்பிறப்புப்பிணி⋆
வீயுமாறு செய்வான்⋆ திருவேங்கடத்-
தாயன்⋆ நாள் மலராம்⋆ அடித் தாமரை⋆
117 வாயுள்ளும் மனத்துள்ளும்⋆ வைப்பார்கட்கே (9)

வைத்த நாள் வரை⋆ எல்லை குறுகிச் சென்று⋆
எய்த்திளைப்பதன்⋆ முன்னம் அடைமினோ!⋆
பைத்த பாம்பணையான்⋆ திருவேங்கடம்⋆
118 மொய்த்த சோலை⋆ மொய் பூந் தடம் தாழ்வரே (10)

‡தாள் பரப்பி⋆ மண் தாவிய ஈசனை⋆
நீள் பொழில்⋆ குருகூர்ச் சடகோபன் சொல்⋆
கேழில் ஆயிரத்து⋆ இப்பத்தும் வல்லவர்⋆
119 வாழ்வர் வாழ்வெய்தி⋆ ஞாலம் புகழவே (11)

## திருவாய்மொழி (3-5) - மொய்ம்மாம்

வார் புனல் அந்தண் அருவி⋆ வட திருவேங்கடத்தெந்தை⋆
பேர் பல சொல்லிப் பிதற்றிப்⋆ பித்தர் என்றே பிறர் கூற⋆
ஊர் பல புக்கும் புகாதும்⋆ உலோகர் சிரிக்க நின்றாடி⋆
120 ஆர்வம் பெருகிக் குனிப்பார்⋆ அமரர் தொழப்படுவாரே (8)

www.prapatti.com

## திருவாய்மொழி (3-9) - சொன்னால்

‡சொன்னால் விரோதம் இது⋆ ஆகிலும் சொல்லுவன் கேண்மினோ⋆
என் நாவில் இன் கவி⋆ யான் ஒருவர்க்கும் கொடுக்கிலேன்⋆
தென்னா தெனாவென்று⋆ வண்டு முரல் திருவேங்கடத்து⋆
121 என்னானை என்னப்பன்⋆ எம் பெருமான் உளனாகவே (1)

## திருவாய்மொழி (4-5) - வீற்றிருந்து

‡ மாரி மாறாத தண்ணம்மலை⋆ வேங்கடத்தண்ணலை⋆
வாரி மாறாத பைம் பூம் பொழில் சூழ்⋆ குருகூர் நகர்⋆
காரி மாறன் சடகோபன்⋆ சொல் ஆயிரத்திப்பத்தால்⋆
122 வேரி மாறாத பூமேல் இருப்பாள்⋆ வினை தீர்க்குமே (11)

## திருவாய்மொழி (5-10) - பிறந்தவாறும்

நின்றவாறும் இருந்த வாறும்⋆
கிடந்த வாறும் நினைப்பரியன⋆
ஒன்றலா உருவாய்⋆ அருவாய நின் மாயங்கள்⋆
நின்று நின்று நினைக்கின்றேன்⋆ உன்னை எங்ஙனம்
நினைகிற்பன்⋆ பாவியேற்-
123 கொன்று நன்குரையாய்⋆ உலகம் உண்ட ஒண் சுடரே! (6)

## திருவாய்மொழி (6-6) - மாலுக்கு

‡மாலுக்கு⋆ வையம் அளந்த மணாளற்கு⋆
நீலக் கரு நிற⋆ மேக நியாயற்கு⋆
கோலச் செந்தாமரைக்⋆ கண்ணற்கு⋆
124 என் கொங்கலரேலக் குழலி⋆ இழந்தது சங்கே (1)

சங்கு வில் வாள் தண்டு⋆ சக்கரக் கையற்கு⋆
செங்கனி வாய்ச்⋆ செய்ய தாமரை கண்ணற்கு⋆
கொங்கலர் தண்ணந் துழாய்⋆ முடியானுக்கு⋆
125 என் மங்கை இழந்தது⋆ மாமைநிறமே (2)



www.prapatti.com

நிறம் கரியானுக்கு⋆ நீடுலகுண்ட⋆
திறங்கிளர் வாய்ச்⋆ சிறுக் கள்ளன் அவற்கு⋆
கறங்கிய சக்கரக்⋆ கையவனுக்கு⋆ என்
126 பிறங்கிரும் கூந்தல்⋆ இழந்தது பீடே (3)

பீடுடை நான்முகனைப்⋆ படைத்தானுக்கு⋆
மாடுடை வையம்⋆ அளந்த மணாளற்கு⋆
நாடுடை மன்னர்க்குத்⋆ தூது செல் நம்பிக்கு⋆ என்
127 பாடுடை அல்குல்⋆ இழந்தது பண்பே (4)

பண்புடை வேதம்⋆ பயந்த பரனுக்கு⋆
மண் புரை வையம்⋆ இடந்த வராகற்கு⋆
தெண் புனல் பள்ளி⋆ எம் தேவ பிரானுக்கு⋆ என்
128 கண்புனை கோதை⋆ இழந்தது கற்பே (5)

கற்பகக் காவன⋆ நற்பல தோளற்கு⋆
பொற்சுடர்க் குன்றன்ன⋆ பூந்தண் முடியற்கு⋆
நற்பல தாமரை⋆ நாள்மலர்க் கையற்கு⋆ என்
129 வில் புருவக்கொடி⋆ தோற்றது மெய்யே (6)

மெய்யமர் பல் கலன்⋆ நன்கணிந்தானுக்கு⋆
பையரவின் அணைப்⋆ பள்ளியினானுக்கு⋆
கையொடு கால் செய்ய⋆ கண்ண பிரானுக்கு⋆ என்
130 தையல் இழந்தது⋆ தன்னுடைச் சாயே (7)

சாயக் குருந்தம்⋆ ஒசித்த தமியற்கு⋆
மாயச் சகடம் உதைத்த⋆ மணாளற்கு⋆
பேயைப் பிணம்படப்⋆ பால் உண் பிரானுக்கு⋆ என்
131 வாசக் குழலி⋆ இழந்தது மாண்பே (8)

மாண்பமை கோலத்து⋆ எம் மாயக் குறளற்கு⋆
சேண் சுடர்க் குன்றன்ன⋆ செஞ்சுடர் மூர்த்திக்கு⋆
காண் பெரும் தோற்றத்து⋆ எம் காகுத்த நம்பிக்கு⋆ என்
132 பூண்புனை மென்முலை⋆ தோற்றது பொற்பே (9)



www.prapatti.com

பொற்பமை நீள் முடிப்⋆ பூந்தண் துழாயற்கு⋆
மற்பொரு தோள் உடை⋆ மாயப் பிரானுக்கு⋆
நிற்பன பல்லுருவாய்⋆ நிற்கு மாயற்கு⋆ என்
133 கற்புடையாட்டி⋆ இழந்தது கட்டே (10)

‡கட்டெழில் சோலை⋆ நல் வேங்கட வாணனை⋆
கட்டெழில் தென் குருகூர்ச்⋆ சடகோபன் சொல்⋆
கட்டெழில் ஆயிரத்து⋆ இப்பத்தும் வல்லவர்⋆
134 கட்டெழில் வானவர்⋆ போகம் உண்பாரே (11)

## திருவாய்மொழி (6-10) - உலகம் உண்ட

‡உலகம் உண்ட பெருவாயா!⋆ உலப்பில் கீர்த்தி அம்மானே⋆
நிலவும் சுடர் சூழ் ஒளி மூர்த்தி!⋆ நெடியாய்! அடியேன் ஆருயிரே⋆
திலதம் உலகுக்காய் நின்ற⋆ திருவேங்கடத்தெம் பெருமானே⋆
135 குல தொல் அடியேன் உன பாதம்⋆ கூடுமாறு கூறாயே (1)

கூறாய் நீறாய் நிலன் ஆகிக்⋆ கொடுவல் அசுரர் குலம் எல்லாம்⋆
சீறா எறியும் திரு நேமி வலவா!⋆ தெய்வக் கோமானே⋆
சேறார் சுனைத் தாமரை செந்தீ மலரும்⋆ திருவேங்கடத்தானே⋆
136 ஆறா அன்பில் அடியேன்⋆ உன் அடிசேர் வண்ணம் அருளாயே (2)

வண்ண மருள் கொள் அணி மேக
வண்ணா!⋆ மாய அம்மானே⋆
எண்ணம் புகுந்து தித்திக்கும்
அமுதே!⋆ இமையோர் அதிபதியே⋆
தெண்ணல் அருவி மணி பொன் முத்-
தலைக்கும்⋆ திருவேங்கடத்தானே⋆
அண்ணலே! உன் அடிசேர⋆
137 அடியேற்காவா என்னாயே! (3)

ஆவா என்னாதுலகத்தை அலைக்கும்⋆ அசுரர் வாணாள்மேல்⋆
தீவாய் வாளி மழை பொழிந்த சிலையா!⋆ திரு மா மகள் கேள்வா

www.prapatti.com

தேவா⋆ சுரர்கள் முனிக் கணங்கள் விரும்பும்⋆ திருவேங்கடத்தானே⋆
138 பூவார் கழல்கள் அருவினையேன்⋆ பொருந்துமாறு புணராயே (4)

புணரா நின்ற மரம் ஏழ்⋆ அன்றெய்த ஒருவில் வலவாவோ⋆
புணரேய் நின்ற மரம் இரண்டின்⋆ நடுவே போன முதல்வாவோ⋆
திணரார் மேகம் எனக்களிறு சேரும்⋆ திருவேங்கடத்தானே⋆
139 திணரார் சார்ங்கத்துன பாதம்⋆ சேர்வதடியேன் எந்நாளே (5)

எந்நாளே நாம் மண்ணளந்த⋆
இணைத் தாமரைகள் காண்பதற்கென்று⋆
எந்நாளும் நின்றிமையோர்கள்
ஏத்தி⋆ இறைஞ்சி இனம் இனமாய்⋆
மெய்ந்நா மனத்தால் வழி பாடு
செய்யும்⋆ திருவேங்கடத்தானே⋆
மெய்ந்நான் எய்தி எந்நாள்⋆ உன்
140 அடிக்கண் அடியேன் மேவுவதே (6)

அடியேன் மேவி அமர்கின்ற
அமுதே!⋆ இமையோர் அதிபதியே⋆
கொடியா அடு புள் உடையானே!⋆
கோலக் கனிவாய்ப் பெருமானே⋆
செடியார் வினைகள் தீர் மருந்தே!⋆
திருவேங்கடத்தெம் பெருமானே⋆
நொடியார் பொழுதும் உன பாதம்⋆
141 காண நோலாதாற்றேனே (7)

நோலாதாற்றேன் உன பாதம்⋆ காணவென்று நுண் உணர்வின்⋆
நீலார் கண்டத்தம்மானும்⋆ நிறை நான்முகனும் இந்திரனும்⋆
சேலேய் கண்ணார் பலர் சூழ விரும்பும்⋆ திருவேங்கடத்தானே⋆
142 மாலாய் மயக்கி அடியேன் பால்⋆ வந்தாய் போலே வாராயே (8)

வந்தாய் போலே வாராதாய்!⋆
வாராதாய் போல் வருவானே⋆
செந் தாமரைக் கண் செங்கனி வாய்⋆

www.prapatti.com

நால் தோள் அமுதே! எனதுயிரே⋆
சிந்தா மணிகள் பகர் அல்லைப்-
பகல் செய்⋆ திருவேங்கடத்தானே⋆
அந்தோ! அடியேன் உன பாதம்⋆
143 அகலகில்லேன் இறையுமே (9)

‡அகலகில்லேன் இறையும் என்று⋆
அலர்மேல் மங்கை உறை மார்பா⋆
நிகரில் புகழாய்! உலகம் மூன்-
றுடையாய்!⋆ என்னை ஆள்வானே⋆
நிகரில் அமரர் முனிக் கணங்கள்
விரும்பும்⋆ திருவேங்கடத்தானே⋆
புகல் ஒன்றில்லா அடியேன்⋆ உன்
144 அடிக்கீழ் அமர்ந்து புகுந்தேனே (10)

‡அடிக் கீழ் அமர்ந்து புகுந்து⋆ அடியீர்!
வாழ்மின் என்றென்றருள் கொடுக்கும்⋆
படிக்கேழ் இல்லாப் பெருமானைப்⋆
பழனக் குருகூர்ச் சடகோபன்⋆
முடிப்பான் சொன்ன ஆயிரத்துத்⋆
திருவேங்கடத்துக்கிவை பத்தும்⋆
பிடித்தார் பிடித்தார் வீற்றிருந்து⋆
145 பெரிய வானுள் நிலாவுவரே (11)

## திருவாய்மொழி (8-2) - நங்கள் வரிவளை

‡நங்கள் வரிவளையாயங்காளோ⋆
நம்முடை ஏதலர் முன்பு நாணி⋆
நுங்கட்கு யான் ஒன்றுரைக்கும் மாற்றம்⋆
நோக்குகின்றேன் எங்கும் காண மாட்டேன்⋆
சங்கம் சரிந்தன சாய் இழந்தேன்⋆
தட முலை பொன் நிறமாய்த் தளர்ந்தேன்⋆
வெங்கண் பறவையின் பாகன் எங்கோன்⋆
146 வேங்கடவாணனை வேண்டிச் சென்றே (1)

இடையில்லை யான் வளர்த்த கிளிகாள்⋆
பூவைகாள்! குயில்காள்! மயில்காள்⋆
உடைய நம் மாமையும் சங்கும் நெஞ்சும்⋆
ஒன்றும் ஒழிய ஒட்டாது கொண்டான்⋆
அடையும் வைகுந்தமும் பாற்கடலும்⋆
அஞ்சன வெற்பும் அவை நணிய⋆
கடையறப் பாசங்கள் விட்டபின்னை
147 அன்றி⋆ அவன் அவை காண்கொடானே (8)

## திருவாய்மொழி (9-3) - ஓராயிரமாய்

இன்றிப் போக⋆ இரு வினையும் கெடுத்து⋆
ஒன்றி யாக்கை புகாமை⋆ உய்யக்கொள்வான்⋆
நின்ற வேங்கடம்⋆ நீள் நிலத்துள்ளது⋆
148 சென்று தேவர்கள்⋆ கை தொழுவார்களே (8)

## திருவாய்மொழி (10-4) - சார்வே தவநெறி

தலைமேல் புனைந்தேன்⋆ சரணங்கள்⋆ ஆலின்
இலைமேல் துயின்றான்⋆ இமையோர் வணங்க⋆
மலைமேல் தான் நின்று⋆ என் மனத்துள் இருந்தானை⋆
149 நிலை பேர்க்கல் ஆகாமை⋆ நிச்சித்திருந்தேனே (4)

## திருவாய்மொழி (10-5) - கண்ணன் கழலிணை

‡மேயான் வேங்கடம்⋆ காயா மலர் வண்ணன்⋆
150 பேயார் முலையுண்ட⋆ வாயான் மாதவனே (6)

## திருவாய்மொழி (10-7) - செஞ்சொற்கவிகாள்

‡ திருமாலிருஞ்சோலை மலையே⋆
திருப்பாற்கடலே என் தலையே⋆
திருமால் வைகுந்தமே⋆ தண்


www.prapatti.com

திருவேங்கடமே எனதுடலே⋆
அருமா மாயத்தெனதுயிரே⋆
மனமே வாக்கே கருமமே⋆
ஒருமா நொடியும் பிரியான்⋆ என்
151 ஊழி முதல்வன் ஒருவனே (8)

பொய்கையாழ்வார் - முதல் திருவந்தாதி

எழுவார் விடைகொள்வார்⋆ ஈன் துழாயானை⋆
வழுவா வகை நினைந்து வைகல் தொழுவார்⋆
வினைச் சுடரை நந்துவிக்கும்⋆ வேங்கடமே⋆ வானோர்
152 மனச் சுடரைத் தூண்டும் மலை (26)

வகை அறு நுண் கேள்வி⋆ வாய்வார்கள்⋆ நாளும்
புகை விளக்கும் பூம் புனலும் ஏந்தி⋆ திசை திசையின்
வேதியர்கள்⋆ சென்றிறைஞ்சும் வேங்கடமே⋆ வெண் சங்கம்
153 ஊதிய வாய்⋆ மால் உகந்த ஊர் (37)

ஊரும் வரி அரவம்⋆ ஒண் குறவர் மால் யானை⋆
பேர எறிந்த பெரு மணியை⋆ கார் உடைய
மின் என்று⋆ புற்றடையும் வேங்கடமே⋆ மேல் அசுரர்
154 என்னென்ற மாலதிடம் (38)

இடந்தது பூமி⋆ எடுத்தது குன்றம்⋆
கடந்தது கஞ்சனை முன் அஞ்ச⋆ கிடந்ததுவும்
நீர் ஓத மா கடலே⋆ நின்றதுவும் வேங்கடமே⋆
155 பேர் ஓத வண்ணர் பெரிது (39)

பெரு வில் பகழிக்⋆ குறவர் கைச் செந்தீ⋆
வெருவிப் புனம் துறந்த வேழம்⋆ இரு விசும்பில்
மீன் வீழக்⋆ கண்டஞ்சும் வேங்கடமே⋆ மேல் அசுரர்
156 கோன் வீழக் கண்டுகந்தான் குன்று (40)

உணர்வார் ஆர் உன் பெருமை⋆ ஊழிதோறூழி⋆
உணர்வார் ஆர் உன் உருவம் தன்னை⋆ உணர்வார் ஆர்

www.prapatti.com

விண்ணகத்தாய்! மண்ணகத்தாய்!⋆ வேங்கடத்தாய்!⋆ நால்வேதப்
157 பண்ணகத்தாய்! நீ கிடந்த பால் (68)

வழி நின்று⋆ நின்னைத் தொழுவார்⋆ வழுவா
மொழி நின்ற⋆ மூர்த்தியரே ஆவர்⋆ பழுதொன்றும்
வாராத வண்ணமே⋆ விண் கொடுக்கும்⋆ மண் அளந்த
158 சீரான் திருவேங்கடம் (76)

வேங்கடமும்⋆ விண்ணகரும் வெஃகாவும்⋆ அஃகாத
பூங்கிடங்கின்⋆ நீள் கோவல் பொன் நகரும்⋆ நான்கிடத்தும்
நின்றான் இருந்தான்⋆ கிடந்தான் நடந்தானே⋆
159 என்றால் கெடுமாம் இடர் (77)

படை ஆரும் வாட் கண்ணார்⋆ பாரசி நாள்⋆ பைம் பூந்
தொடையலோடு⋆ ஏந்திய தூபம்⋆ இடை இடையில்
மீன் மாய⋆ மாசூணும் வேங்கடமே⋆ மேல் ஒரு நாள்
160 மான் மாயவெய்தான் வரை (82)

‡உளன் கண்டாய் நன்னெஞ்சே!⋆ உத்தமன் என்றும்
உளன் கண்டாய்⋆ உள்ளுவார் உள்ளத்துளன் கண்டாய்⋆
வெள்ளத்தின் உள்ளானும்⋆ வேங்கடத்து மேயானும்⋆
161 உள்ளத்தின் உள்ளான் என்றோர் (99)

## பூதத்தாழ்வார் - இரண்டாம் திருவந்தாதி

சென்றதிலங்கைமேல்⋆ செவ்வே தன் சீற்றத்தால்⋆
கொன்றதிராவணனைக் கூறுங்கால்⋆ நின்றதுவும்
வேய் ஓங்கு தண் சாரல்⋆ வேங்கடமே⋆ விண்ணவர் தம்
162 வாய் ஓங்கு தொல் புகழான் வந்து (25)

வந்தித்தவனை⋆ வழி நின்ற ஐம் பூதம்⋆
ஐந்தும் அகத்தடக்கி ஆர்வமாய்⋆ உந்திப்
படி அமரர் வேலையான்⋆ பண்டமரர்க்கீந்த⋆
163 படி அமரர் வாழும் பதி (26)



www.prapatti.com

பதி அமைந்துநாடிப்⋆ பருத்தெழுந்த சிந்தை⋆
மதி உரிஞ்சி வான் முகடு நோக்கி⋆ கதி மிகுத்தம்
கோல் தேடி ஓடும்⋆ கொழுந்ததே போன்றதே⋆
164 மால் தேடி ஓடும் மனம் (27)

மனத்துள்ளான் வேங்கடத்தான்⋆ மா கடலான்⋆ மற்றும்
நினைப்பரிய⋆ நீள் அரங்கத்துள்ளான்⋆ எனைப் பலரும்
தேவாதி தேவன்⋆ எனப்படுவான்⋆ முன் ஒரு நாள்
165 மா வாய் பிளந்த மகன் (28)

துணிந்தது சிந்தை⋆ துழாய் அலங்கல்⋆ அங்கம்
அணிந்தவன் பேர் உள்ளத்துப் பல்கால்⋆ பணிந்ததுவும்
வேய் பிறங்கு சாரல்⋆ விறல் வேங்கடவனையே⋆
166 வாய் திறங்கள் சொல்லும் வகை (33)

உளதென்றிறுமாவார்⋆ உண்டில்லை என்று⋆
தளர்தல் அதன் அருகுஞ்சாரார்⋆ அளவரிய
வேதத்தான் வேங்கடத்தான்⋆ விண்ணோர் முடி தோயும்⋆
167 பாதத்தான் பாதம் பயின்று (45)

பயின்றதரங்கம் திருக்கோட்டி⋆ பன்னாள்
பயின்றதுவும்⋆ வேங்கடமே பன்னாள்⋆ பயின்ற-
தணி திகழும் சோலை⋆ அணி நீர் மலையே⋆
168 மணி திகழும் வண் தடக்கை மால் (46)

நெறியார் குழல் கற்றை⋆ முன் நின்று பின் தாழ்ந்து⋆
அறியாதிளங்கிரி என்றெண்ணி⋆ பிறியாது
பூங்கொடிக்கள் வைகும்⋆ பொரு புனல் குன்றென்றும்⋆
169 வேங்கடமே யாம் விரும்பும் வெற்பு (53)

வெற்பென்றிருஞ்சோலை⋆ வேங்கடம் என்றிவ்விரண்டும்⋆
நிற்பென்று நீ மதிக்கும் நீர்மை போல்⋆ நிற்பென்று
உளம் கோயில்⋆ உள்ளம் வைத்துள்ளினேன்⋆ வெள்ளத்-
170 திளங்கோயில் கைவிடேல் என்று (54)

www.prapatti.com

போதறிந்து வானரங்கள்⋆ பூஞ்சுனை புக்கு⋆ ஆங்கலர்ந்த
போதரிந்து கொண்டேத்தும் போது⋆ உள்ளம் போது
மணி வேங்கடவன்⋆ மலர் அடிக்கே செல்ல⋆
171 அணி வேங்கடவன் பேர் ஆய்ந்து (72)

பெருகு மத வேழம்⋆ மாப் பிடிக்கு முன் நின்று⋆
இரு கண் இள மூங்கில் வாங்கி⋆ அருகிருந்த
தேன் கலந்து நீட்டும்⋆ திரு வேங்கடம் கண்டீர்⋆
172 வான் கலந்த வண்ணன் வரை (75)

## பேயாழ்வார் - மூன்றாம் திருவந்தாதி

மாற்பால் மனம் சுழிப்ப⋆ மங்கையர் தோள் கைவிட்டு⋆
நூற்பால் மனம் வைக்க நொய்விதாம்⋆ நால் பால
வேதத்தான் வேங்கடத்தான்⋆ விண்ணோர் முடிதோயும்⋆
173 பாதத்தான் பாதம் பணிந்து (14)

சிறந்த என் சிந்தையும் செங்கண் அரவும்⋆
நிறைந்த சீர் நீள் கச்சி உள்ளும்⋆ உறைந்ததுவும்
வேங்கடமும் வெஃகாவும்⋆ வேளுக்கைப் பாடியுமே⋆
174 தாம் கடவார் தண் துழாயார் (26)

சேர்ந்த திருமால்⋆ கடல் குடந்தை வேங்கடம்⋆
நேர்ந்த என் சிந்தை நிறை விசும்பும்⋆ வாய்ந்த
மறை பாடகம் அனந்தன்⋆ வண் துழாய்க் கண்ணி⋆
175 இறைபாடி ஆய இவை (30)

பாற்கடலும் வேங்கடமும்⋆ பாம்பும் பனி விசும்பும்⋆
நூற் கடலும் நுண் நூல தாமரை மேல்⋆ பாற்பட்-
டிருந்தார் மனமும்⋆ இடமாகக் கொண்டான்⋆
176 குருந்தொசித்த கோபாலகன் (32)

இறை ஆய் நிலன் ஆகி⋆ எண் திசையும் தானாய்⋆
மறையாய் மறைப் பொருளாய் வானாய்⋆ பிறை வாய்ந்த

www.prapatti.com

வெள்ளத்தருவி⋆ விளங்கொலி நீர் வேங்கடத்தான்⋆
177 உள்ளத்தின் உள்ளே உளன் (39)

உளன் கண்டாய் நன்னெஞ்சே!⋆ உத்தமன் என்றும்
உளன் கண்டாய்⋆ உள்ளுவார் உள்ளத்துளன் கண்டாய்⋆
விண் ஒடுங்கக் கோடுயரும்⋆ வீங்கருவி வேங்கடத்தான்⋆
178 மண் ஒடுங்கத் தான் அளந்த மன் (40)

புரிந்து மத வேழம்⋆ மாப் பிடியோடூடி⋆
திரிந்து சினத்தால் பொருது⋆ விரிந்த சீர்
வெண் கோட்டு⋆ முத்துதிர்க்கும் வேங்கடமே⋆ மேல் ஒருநாள்
179 மண் கோட்டுக் கொண்டான் மலை (45)

தெளிந்த சிலாதலத்தின்⋆ மேல் இருந்த மந்தி⋆
அளிந்த கடுவனையே நோக்கி⋆ விளங்கிய
வெண் மதியம்⋆ தா என்னும் வேங்கடமே⋆ மேல் ஒரு நாள்
180 மண் மதியில் கொண்டுகந்தான் வாழ்வு (58)

‡பண்டெல்லாம் வேங்கடம்⋆ பாற்கடல் வைகுந்தம்⋆
கொண்டங்குறைவார்க்குக் கோயில் போல்⋆ வண்டு
வளம் கிளரும் நீள் சோலை⋆ வண் பூங்கடிகை⋆
181 இளங்குமரன் தன் விண்ணகர் (61)

விண்ணகரம் வெஃகா⋆ விரி திரை நீர் வேங்கடம்⋆
மண் நகரம் மா மாட வேளுக்கை⋆ மண்ணகத்த
தென் குடந்தை⋆ தேன் ஆர் திருவரங்கம் தென்கோட்டி⋆
182 தன் குடங்கை நீர் ஏற்றான் தாழ்வு (62)

தாழ் சடையும் நீள் முடியும்⋆ ஒண் மழுவும் சக்கரமும்⋆
சூழ் அரவும் பொன் நாணும் தோன்றுமால்⋆ சூழும்
திரண்டருவி பாயும்⋆ திருமலை மேல் எந்தைக்கு⋆
183 இரண்டுருவும் ஒன்றாய் இசைந்து (63)

பார்த்த கடுவன்⋆ சுனை நீர் நிழல் கண்டு⋆
பேர்த்தோர் கடுவன் எனப் பேர்ந்து⋆ கார்த்த



www.prapatti.com

களங்கனிக்குக்⋆ கை நீட்டும் வேங்கடமே⋆ மேல் நாள்
184 விளங்கனிக்குக் கன்றெறிந்தான் வெற்பு (68)

வெற்பென்று⋆ வேங்கடம் பாடும்⋆ வியன் துழாய்க்
கற்பென்று சூடும்⋆ கருங்குழல் மேல்⋆ மல் பொன்ற
நீண்ட தோள் மால் கிடந்த⋆ நீள் கடல் நீர் ஆடுவான்⋆
185 பூண்ட நாள் எல்லாம் புகும் (69)

புகு மதத்தால்⋆ வாய் பூசிக் கீழ் தாழ்ந்து⋆ அருவி
உகு மதத்தால்⋆ கால் கழுவிக் கையால்⋆ மிகு மதத் தேன்
விண்ட மலர் கொண்டு⋆ விறல் வேங்கடவனையே⋆
186 கண்டு வணங்கும் களிறு (70)

களிறு முகில் குத்தக்⋆ கை எடுத்தோடி⋆
ஒளிறு மருப்பொசி கை யாளி பிளிறி
விழ⋆ கொன்று நின்றதிரும்⋆ வேங்கடமே⋆ மேல்நாள்
187 குழக் கன்று கொண்டெறிந்தான் குன்று (71)

குன்றொன்றின் ஆய⋆ குற மகளிர் கோல் வளைக் கை⋆
சென்று விளையாடும் தீங்கழை போய்⋆ வென்று
விளங்கு மதி கோள் விடுக்கும்⋆ வேங்கடமே⋆ மேலை
188 இளங்குமரர் கோமான் இடம் (72)

இடம் வலம் ஏழ் பூண்ட⋆ இரவித் தேர் ஓட்டி⋆
வட முக வேங்கடத்து மன்னும்⋆ குடம் நயந்த
கூத்தனாய் நின்றான்⋆ குரை கழலே கூறுவதே⋆
189 நாத்தன்னால் உள்ள நலம் (73)

சார்ந்தகடு தேய்ப்பத்⋆ தடாவிய கோட்டுச்சிவாய்⋆
ஊர்ந்தியங்கும் வெண் மதியின் ஒண் முயலை⋆ சேர்ந்து
சின வேங்கை பார்க்கும்⋆ திருமலையே⋆ ஆயன்
190 புன வேங்கை நாறும் பொருப்பு (75)

முடிந்த பொழுதில் குற வாணர்⋆ ஏனம்
படிந்துழு சால்⋆ பைந் தினைகள் வித்த⋆ தடிந்தெழுந்த

www.prapatti.com

வேய்ங்கழை போய்⋆ விண் திறக்கும் வேங்கடமே⋆ மேல் ஒரு நாள்
191 தீங்குழல் வாய் வைத்தான் சிலம்பு (89)

### திருமழிசையாழ்வார் - நான்முகன் திருவந்தாதி

குறிப்பெனக்குக்⋆ கோட்டியூர் மேயானை ஏத்த⋆
குறிப்பெனக்கு நன்மை பயக்க⋆ வெறுப்பனோ
வேங்கடத்து மேயானை⋆ மெய் வினை நோய் எய்தாமல்⋆
192 தான் கடத்தும் தன்மையான் தாள் (34)

அழைப்பன்⋆ திருவேங்கடத்தானைக் காண⋆
இழைப்பன் திருக்கூடல் கூட⋆ மழைப் பேர்
அருவி⋆ மணி வரன்றி வந்திழிய⋆ யானை
193 வெருவி அரவொடுங்கும் வெற்பு (39)

வெற்பென்று⋆ வேங்கடம் பாடினேன்⋆ வீடாக்கி
நிற்கின்றேன்⋆ நின்று நினைக்கின்றேன்⋆ கற்கின்ற
நூல்வலையில் பட்டிருந்த⋆ நூலாட்டி கேள்வனார்⋆
194 கால் வலையில் பட்டிருந்தேன் காண் (40)

காணல் உறுகின்றேன்⋆ கல் அருவி முத்துதிர⋆
ஓண விழவில் ஒலி அதிர⋆ பேணி
வரு வேங்கடவா!⋆ என் உள்ளம் புகுந்தாய்⋆
195 திருவேங்கடம் அதனைச் சென்று (41)

சென்று வணங்குமினோ⋆ சேண் உயர் வேங்கடத்தை⋆
நின்று வினை கெடுக்கும் நீர்மையால்⋆ என்றும்
கடிக் கமல நான்முகனும்⋆ கண் மூன்றத்தானும்⋆
196 அடிக் கமலம் இட்டேத்தும் அங்கு (42)

மங்குல் தோய் சென்னி⋆ வட வேங்கடத்தானை⋆
கங்குல் புகுந்தார்கள் காப்பணிவான்⋆ திங்கள்
சடை ஏற வைத்தானும்⋆ தாமரை மேலானும்⋆
197 குடை ஏறத் தாம் குவித்துக் கொண்டு (43)



www.prapatti.com

கொண்டு குடங்கால்⋆ மேல் வைத்த குழவியாய்⋆
தண்ட அரக்கன் தலை தாளால் பண்டெண்ணிப்⋆
போம் குமரன் நிற்கும்⋆ பொழில் வேங்கட மலைக்கே⋆
198 போம் குமரருள்ளீர் புரிந்து (44)

புரிந்து மலர் இட்டுப்⋆ புண்டரீகப் பாதம்⋆
பரிந்து படுகாடு நிற்ப⋆ தெரிந்தெங்கும்
தான் ஓங்கி நிற்கின்றான்⋆ தண் அருவி வேங்கடமே⋆
199 வானோர்க்கும் மண்ணோர்க்கும் வைப்பு (45)

வைப்பன் மணி விளக்கா⋆ மா மதியை⋆ மாலுக்கென்று
எப்பொழுதும் கை நீட்டும் யானையை⋆ எப்பாடும்
வேடு வளைக்கக்⋆ குறவர் வில் எடுக்கும் வேங்கடமே⋆
200 நாடு வளைத்தாடுதுமேல் நன்று (46)

நன்மணி வண்ணன் ஊர்⋆ ஆளியும் கோளரியும்⋆
பொன் மணியும் முத்தமும் பூ மரமும்⋆ பன்மணி நீ-
ரோடு⋆ பொருதுருளும் கானமும் வானரமும்⋆
201 வேடுமுடை வேங்கடம் (47)

வேங்கடமே⋆ விண்ணோர் தொழுவதுவும்⋆ மெய்ம்மையால்
வேங்கடமே⋆ மெய் வினை நோய் தீர்ப்பதுவும்⋆ வேங்கடமே
தானவரை வீழத்⋆ தன் ஆழிப் படை தொட்டு⋆
202 வானவரைக் காப்பான் மலை (48)

வீற்றிருந்து⋆ விண்ணாள வேண்டுவார்⋆ வேங்கடத்தான்
பால் திருந்து⋆ வைத்தாரே பல் மலர்கள்⋆ மேல் திருந்து
வாழ்வார்⋆ வருமதி பார்த்தன்பினராய்⋆ மற்றவர்க்கே
203 தாழ்வாய் இருப்பார் தமர் (90)

நம்மாழ்வார் - திருவிருத்தம்

காண்கின்றனகளும்⋆ கேட்கின்-
றனகளும் காணில்⋆ இந் நாள்
பாண் குன்ற நாடர் பயில்கின்-



www.prapatti.com

றன⋆ இதெல்லாம் அறிந்தோம்
மாண் குன்றம் ஏந்தி தண் மா மலை
வேங்கடத்தும்பர் நம்பும்⋆
சேண் குன்றம் சென்று⋆ பொருள் படைப்-
204 பான் கற்ற திண்ணனவே (8)

மாயோன் வட திருவேங்கட நாட⋆ வல்லிக் கொடிகாள்!
நோயோ உரைக்கிலும்⋆ கேட்கின்றிலீர் உரையீர்⋆ நுமது
வாயோ அதுவன்றி வல்வினையேனும் கிளியும் மெள்கும்⋆
205 ஆயோ அடும் தொண்டையோ⋆ அறையோ இதறிவரிதே (10)

கயலோ நும கண்கள் என்று⋆ களிறு வினவி நிற்றீர்⋆
அயலோர் அறியிலும் ஈதென்ன வார்த்தை⋆ கடல் கவர்ந்த
புயலோடுலாம் கொண்டல் வண்ணன் புன வேங்கடத்தெம்மொடும்⋆
206 பயலோவிலீர்⋆ கொல்லைக் காக்கின்ற நாளும் பல பலவே (15)

இசை மின்கள் தூதென்று⋆ இசைத்தால்
இசையிலம்⋆ என் தலைமேல்
அசை மிங்கள் என்றால் அசையும் கொலாம்⋆
அம்பொன் மா மணிகள்
திசை மின் மிளிரும் திருவேங்-
கடத்து வன் தாள்⋆ சிமய
மிசை⋆ மின் மிளிரியப் போவான்
207 வழிக் கொண்ட மேகங்களே (31)

ஒண்ணுதல் மாமை⋆ ஒளி பயவாமை⋆ விரைந்து நந் தேர்
நண்ணுதல் வேண்டும்⋆ வலவ! கடாகின்று⋆ தேன் நவின்ற
விண் முதல் நாயகன் நீள் முடி வெண் முத்த வாசிகைத்தாய்⋆
208 மண் முதல் சேர்வுற்று⋆ அருவி செய்யா நிற்கும் மா மலைக்கே (50)

‡முலையோ முழு முற்றும் போந்தில⋆ மொய் பூங்குழல் குறிய
கலையோ அரை இல்லை⋆ நாவோ குழறும்⋆ கடல் மண் எல்லாம்
விலையோ என மிளிரும் கண் இவள் பரமே!⋆ பெருமான்
209 மலையோ⋆ திருவேங்கடம் என்று கற்கின்ற வாசகமே (60)

www.prapatti.com

காவியும் நீலமும்⋆ வேலும் கயலும் பல பல வென்று⋆
ஆவியின் தன்மை அளவல்ல பாரிப்பு⋆ அசுரர் செற்ற
மாவியம் புள் வல்ல மாதவன் கோவிந்தன் வேங்கடம் சேர்⋆
210 தூவியம் பேடை அன்னாள்⋆ கண்கள் ஆய துணைமலரே (67)

உறுகின்ற கன்மங்கள்⋆ மேலன
ஓர்ப் பிலராய்⋆ இவளைப்
பெறுகின்ற தாயர்⋆ மெய்ந் நொந்து
பெறார்கொல்⋆ துழாய் குழல்வாய்த்
துறுகின்றிலர் தொல்லை வேங்கடம்
ஆட்டவும் சூழ்கின்றிலர்⋆
இறுகின்றதால் இவள் ஆகம்⋆ மெல்
211 ஆவி எரி கொள்ளவே (81)

## நம்மாழ்வார் - பெரிய திருவந்தாதி

கல்லும் கனை கடலும்⋆ வைகுந்த வானாடும்⋆
புல் என்றொழிந்தனகொல் ஏ பாவம்⋆ வெல்ல
நெடியான் நிறம் கரியான்⋆ உள் புகுந்து நீங்கான்⋆
212 அடியேனதுள்ளத்தகம் (68)

## திருமங்கையாழ்வார் - சிறிய திருமடல்

மற்றெனக்கிங்
காரானும் கற்பிப்பார் நாயகரே⋆ நான் அவனைக்
காரார் திருமேனி காணும் அளவும் போய்⋆
‡சீரார் திருவேங்கடமே திருக்கோவலூரே⋆
மதிட்கச்சி ஊரகமே பேரகமே⋆
பேரா மருதிறுத்தான் வெள்ளறையே வெஃகாவே⋆
பேராலி தண்கால் நறையூர் திருப்புலியூர்⋆
213 ‡ஆராமம் சூழ்ந்த அரங்கம் (36)

## திருமங்கையாழ்வார் - பெரிய திருமடல்

மழைக் கூந்தல்

தென்னன் உயர் பொருப்பும் தெய்வ வடமலையும்⋆
என்னும் இவையே முலையா வடிவமைந்த⋆
214 அன்ன நடைய அணங்கே (4)

மின்னி மழை தவழும் வேங்கடத்தெம் வித்தகனை⋆
மன்னனை மாலிருஞ்சோலை மணாளனை⋆
215 கொல் நவிலும் ஆழிப் படையானை (68)

## திருவரங்கத்தமுதனார் - இராமாநுச நூற்றந்தாதி

‡நின்ற வண் கீர்த்தியும் நீள் புனலும்⋆ நிறை வேங்கடப் பொற்
குன்றமும்⋆ வைகுந்த நாடும் குலவிய பாற்கடலும்⋆
உன்தனக்கெத்தனை இன்பம் தரும் உன் இணைமலர்த் தாள்⋆
216 என் தனக்கும் அது⋆ இராமானுச! இவை ஈந்தருளே (76)

‡இருப்பிடம் வைகுந்தம் வேங்கடம்⋆ மாலிருஞ்சோலை என்னும்
பொருப்பிடம்⋆ மாயனுக்கென்பர் நல்லோர்⋆
அவை தம்மொடும் வந்
திருப்பிடம் மாயன் இராமானுசன் மனத்து⋆ இன்றவன் வந்
217 திருப்பிடம்⋆ என்தன் இதயத்துள்ளே தனக்கின்புறவே (106)

## தேசிக பிரபந்தம் - அதிகாரசங்கிரகம்

‡கண்ணன் அடி இணை எமக்குக் காட்டும் வெற்பு⋆
கடு வினையர் இரு வினையும் கடியும் வெற்பு⋆
திண்ணம் இது வீடென்னத் திகழும் வெற்பு⋆
தெளிந்த பெரும் தீர்த்தங்கள் செறிந்த வெற்பு⋆
புண்ணியத்தின் புகல் இதெனப் புகழும் வெற்பு⋆
பொன் உலகில் போகம் எல்லாம் புணர்க்கும் வெற்பு⋆
விண்ணவரும் மண்ணவரும் விரும்பும் வெற்பு⋆
218 வேங்கட வெற்பென விளங்கும் வேத வெற்பே (43)

॥ திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம் ॥



www.prapatti.com